Registered as a NewsPaper

விலை ரூபா : 8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -16 | திருவள்ளுவர் ஆண்டு- 2036 | வைகாசி-18 | 01-06-2005 | புதன்கிழமை | ஓசை 103

கணேசா நகையகம்
தங்கநகை உலகில் தமக்கென தனியிடம் பதித்தவர்கள்
இல:123. பஜார் வீதி. வவுனியா. T.P.-024-2222464
இல:194. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம். T.P.-021-2225987
(சி-12120)

# சிறிலங்கா இராணுவ புலனாய்வுக் கட்டளை அதிகாரி நாரஹென் பிட்டியவில் நேற்று சுட்டுக்கொலை!

## இறப்பின் பின் அரசால் தரநிலை உயர்வு

(கொழும்பு)

**சிறிலங்கா இராணுவ புலனாய்வுக் கட்டளையிடும் அதிகாரி மேஜர் துவாம் ஷோம் முத்தலிப் (வயது 39) நாரஹென் பிட்டியவில் வைத்து நேற்றுக்காலை சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். இவர் இறப்பிற்குப் பின் லெப். கேணலாகத் தரமுயர்த்தப்பட்டுள்ளார்.**

சிறிலங்கா இராணுவப் புலனாய்வுத் துறையின் முதலாவது கட்டளை இடும் அதிகாரியான இவர் நேற்றுக் காலை 7.20 மணியளவில் நாரஹென் பிட்டிய மலிங்கவுனில் உள்ள தனது இல்லத்திலிருந்து கொத்தலாவல இராணுவக் கல்லூரிக்குச் சென்று கொண்டிருந்தார். அச்சமயம் நாரஹென் பிட்டிய எல்விற்றி ஹல வித்தியாலயத்திற்கு முன்பாக வாகனம் சென்று கொண்டிருந்தபோது பாதை சமிக்ஞைக்காக வாகனத்தின் வேகத்தை சாரதி குறைத்த வேளை இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் நடந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

வாகனம் வீதிச் சமிக்ஞை விளக்கிற்கு அருகில் வேகத்தைக் குறைத்தபோது மோட்டார் சைக்கிளில் வந்த இருவரில் ஒருவர் முத்தலிப் பயணம் செய்த வாகனத்தை

(12 ஆம் பக்கம் பார்க்க)



## அரசியல்துறைப்பொறுப்பாளருடன் சுவிஸ் தூதுவர் நாளை சந்திப்பு

தமிழீழஅரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை இலங்கைக்கான சுவிஸ் நாட்டு தூதுவர் பேனாடினோறெகான் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நாளை வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு கிளிநொச்சியிலுள்ள தமிழீழ விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகத்தில் இந்தச் சந்திப்பு நடைபெறவுள்ளது.

இந்த சந்திப்பில் தற்போதைய அரசியல் நிலைப்பாடுகள் தொடர்பாகக் கருத்துக்கள் பரிமாறப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## இலங்கைக்கான ஐ.நா பிரதிநிதியை விரைவில் வெளியேற்ற அரசு முயற்சி

### பில்கிளிங்டன்–றெஜி சந்திப்பிற்கும் கடும் விசனம்

இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் சபையின் கொழும்புப் பிரதிநிதியைச் சிறிலங்கா அரசு விரைவில் வெளியேற்றக் கூடும் என்று கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐ.நா விசேட பிரதிநிதியும் அமெரிக்க முன்னாள் சனாதிபதியுமான பில்கிளிங்டனின் அண்மைய இலங்கைப் பயணத்தின்போது கிளிங்டனைத் தமிழர் புனர்வாழ்வுக் கழக நிறைவேற்றுப்பணிப்பாளர் றெஜி சந்தித்துப் பேசியது குறித்து சிறிலங்கா வெளியுறவுத்துறை அமைச்சு கடும் விசனத்தை வெளிப்படுத்தியிருக்கிறது.

கிளிங்டனின் பயணத்தில் தமிழ் நெற் இணையத்தளப் புகைப்படக் கலைஞர் பங்கேற்றது குறித்தும் வெளியுறவுத்துறை விசனமடைந்துள்ளது.

கிளிங்டனைத் தமிழர் புனர்வாழ்வுக்கழக பிரதிநிதி சந்திப்பது தொடர்பாகத் தமக்கு எதுவும் தெரிவிக்

(12 ஆம்பக்கம் பார்க்க)

## அரச காணியில் அத்துமீறிப் புத்தர்சிலை நிறுவல்; சட்டமா அதிபர் சார்பில் வழக்குத்தாக்கல்

(கொழும்பு)

திருகோணமலையில் நிறுவப்பட்டுள்ள புத்தர்சிலை தொடர்பில் சட்டமா அதிபரினால் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டது.சட்டமா அதிபரின் சார்பில் அரச தரப்பு சட்டத்தரணி இந்த மனுவை நேற்றுத் தாக்கல் செய்தார்.

இதில் பிரதிவாதியாக திருகோணமலை நகர முச்சக்கர வண்டிகளின் சாரதிகள்சங்க செயலாளர் கீர்த்தி பிரியலால் குறிப்பிடப்பட்டுள்ளார்.

அரசாங்கத்திற்குச் சொந்தமான காணியில் அத்துமீறிப் பிரவேசித்து புத்தர் சிலையை நிறுவினார் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த நிலையில் மனுவை விசாரணை செய்த நீதிபதி குறிப்பிட்ட புத்தர்சிலை தொடர்பில் நீதவான் நீதிமன்றத்தில் நடைபெற்று வரும் வழக்கு விசாரணை முடிவடையும் வரை புத்தர்சிலைப் பகுதியில் எவ்வித நிர்மாண நடவடிக்கைகளையும் மேற்கொள்ளக்கூடாது என உத்தரவு பிறப்பித்தார்.

(12 ஆம்பக்கம் பார்க்க)

## புத்தர்சிலையை அப்புறப்படுத்த இன்று மீண்டும் சந்திப்பு

திருமலையில் சட்டவிரோத புத்தர்சிலையை அப்புறப்படுத்துவது தொடர்பாக இன்று விசேட சந்திப்பு நடைபெறவுள்ளது.

தமிழ்மக்கள் பேரவையினருக்கும், சிங்களப் பிரதிநிதிகளுக்கும் இடையே இந்தச் சந்திப்பு இடம்பெறவுள்ளது. திருமலை நகரில் ஏற்பட்டிருக்கும் நிலைமை தொடர்பாக அமைச்சர்களுக்கும், தமிழ்மக்கள் பேரவையினருக்கும் இடையே கடந்த 25ஆம் திகதி திருமலை ஆளுநர் செயலகத்தில் சந்திப்பு நடைபெற்றது.

நகரில் இருக்கும் சட்டவிரோத வணக்கஸ்தலங்களை எதிர்வரும் இரண்டாம் திகதிக்கு முன்னர் அப்புறப்படுத்துவதற்கு

(12 ஆம்பக்கம் பார்க்க)

## செட்டிகுளத்தில் பேருந்து விபத்து மூவர் பலி;20 பேர் காயம்

(மன்னார்)

கொழும்பு தனியார் பேருந்து நிலையத்திலிருந்து மன்னார் நோக்கி வந்த பயணிகள் பேருந்தொன்று செட்டிகுளம் கல்லாறு பகுதியில் விபத்துக்குள்ளானதில் மூவர் உயிரிழந்ததுடன் 20 இற்கும் மேற்பட்டோர் காய மடைந்துள்ளனர்.

நேற்று அதிகாலை 4.45 மணியளவில் இடம்பெற்ற இவ் விபத்தில் இறந்தவர்களில் சாரதியும் மன்னார் உப்புக்குளத்தைச் சேர்ந்த [illegible]னா என்ற பெண்ணும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்

இவ்விபத்திற்குச் சாரதியின் கவனக்குறைவே காரணம் என மேற்படி பேருந்தில் பயணம் செய்த பயணிகள் தெரிவிக்கின்றனர்.(18)

## படையினரின் தடையை அகற்றக்கோரி வாகரையில் ஆர்ப்பாட்டப் பேரணி

### - சிறிலங்கா சனாதிபதிக்கு மகஜர் கையளிப்பு

(மட்டக்களப்பு)

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப்பிரதேசத்துக்குள் கட்டடப்பொருட்கள் மற்றும் அத்தியா வசியப்பொருட்களை பொது மக்கள் எடுத்துச்செல்வதற்குப் படையின் தடைவிதிப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து மட்டக்களப்பு வாகரைப் பிரதேசத்தில் நேற்று எதிர்ப்பு ஆர்ப்பாட்டப்பேரணியொன்று நடைபெற்றுள்ளது.

காலை ஒன்பது மணிக்கு வாகரைப் பிரதேச பனிச்சங்கேணி சந்தியில் ஆரம்பமான ஆர்ப்பாட்டப் பேரணி கஜுவத்தை சிறிலங்கா இராணுவ முகாம் அமைந்துள்ள பகுதிவரை நடத்தப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டப் பேரணியின் இறுதியில் பொதுமக்களின் கோரிக்கைகள் அடங்கிய சனாதிபதிக்கான மனு ஒன்று வாழைச்சேனை உதவிப் பொலிஸ் பரிசோதகரிடம் கையளிக்கப்பட்டுள்ளது. அத்துடன் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு பிரதிநிதி, உதவிப் பிரதேச செயலாளர் ஆகியோருக்கும் மனுக்களின் பிரதிகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்தப் பேரணியின்போது எவ்வித அசம்பாவிதங்களும் இடம்பெறவில்லையென சிறிலங்காப் பொலிசார் கூறினர்.

## மக்கள்–படையினர் மூதூரில் முறுகல்

மூதூர் இறங்குதுறையில் நேற்று மக்களுக்கும் படையினருக்கும் இடையில் முறுகல் நிலை ஒன்று ஏற்பட்டுள்ளது. குறித்த இறங்குதுறையில் இருந்து பயணிகளை ஏற்றி இறக்குவதில் படையினருடன் நெருக்கமானவர்களுக்கு வாய்ப்புகள் வழங்கப்படுவதாகத் தெரிவித்தே மக்கள் படையினருடன் தர்க்கத்தில் ஈடுபட்டனர்.

## வவுனியா வளாக மாணவர் பகிஷ்கரிப்பு

யாழ் பல்கலைக் கழகத்தின் வவுனியா வளாக மாணவர்கள் மீண்டும் பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இதன் காரணமாக வவுனியா வளாகத்தின் இரண்டு பீடங்களிலும் கல்வி நடவடிக்கைகள் எதுவும் இடம்பெறவில்லை. பல ஆண்டுகளாக

(12 ஆம்பக்கம் பார்க்க)

# தாயகத்துறைமுகங்களிலும், பலாலிபடைத்தளத்திலும் தமிழீழ தேசியக்கொடி பறக்கும் காலம் நெருங்கிவிட்டது!

-கிளி. கோட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர்

(அலுவலக செய்தியாளர்)

அரசின் சமாதான நாடகத்தின் கடைசிப்பாத்திரம் தற்போது இடம் பெற்று வருகிறது.இந்த நாடகத்தின் முடிவின் விளைவு எமது தாயக மண்ணில் வரலாற்று நகரங்களை மீட்க வழி சமைக்கவுள்ளதுடன், எமது தாயகத்துறைமுகங்களிலும், பலாலி படைத்தளத்திலும் தமிழீழத் தேசியக்கொடி பறக்கும் காலம் நெருங்கிவிட்டது. இதன் மூலம் மீண்டும் எதிரியானவன் எமது பலத்தைப் புரிந்து கொள்வான். எனவே நாம் ஒன்று பட்ட சக்தியாக அணி திரண்டு எம் தேசியத் தலைவரின் கரங்களைப் பலப்படுத்துவோம்.

இவ்வாறு நேற்றுப் பிற்பகல் ஊற்றுப்புலம் அ.த.க. பாடசாலையில் நடைபெற்ற சமகாலக்கருத்தரங்கில் கலந்து கொண்டு கிளி. கோட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் சிறீ கருத்துரை வழங்குகையில் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில், சிறிலங்கா அரசின் ஏமாற்று வித்தையினையும் இனவாதப் போக்கினையும், கடந்த 33 ஆண்டுகளுக்கு முன்பே எமது தேசியத்தலைவர் தீர்க்க தரிசனமாகப் புரிந்து கொண்டமையின் காரணமாக ஆயுதப்புரட்சியின் மூலமே தமிழர் தாயகத்தை மீட்டெடுக்க முடியும் என்பதை உலகிற்கு உணர்த்தியது மட்டுமல்லாது அதனை நிரூபித்துக் காட்டியவர். இதன் காரணமாக எமது தமிழினம் இன்றுதலைநிமிர்ந்து நிற்கின்றது.

1985ஆம் ஆண்டு பூட்டானில் வட்டமேசை மாநாடு என்ற சமாதான மாயை மூலம் ஏமாற்ற நினைத்த அரச படைகளை முகாமிற்குள் முடக்கி காவல்வேலிகளை அமைத்து எமது பலத்தினை நிரூபித்தார்.அடுத்து1987இல்இந்திய வல்லாதிக்க இராணுவத்தின் துணையுடன் எமது இனத்தை அழிக்க முற்பட்டபோது எமது உரிமைக்காக இறுதிவரை எமது தலைவர் இந்தியப் படைகளை எதிர்த்து நின்று வல்லரசுகளுடன் மோதமுடியும் என்பதை நிரூபித்துக் காட்டியவர்.

அதேபோன்று 1990,1995 களில் அரசு மேற்கொண்ட சகல விதமான நடவடிக்கைகளையும் தீர்க்க சிந்தனையுடன் எதிர்கொண்டு உலகம் வியக்கும் வகையில் வெற்றி வாகை சூடியவர் என அவர் மேலும் தெரிவித்தார்.

ஊரக வளர்ச்சிப்பணி கிராம பொறுப்பாளர் தசரதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஊற்றுப்புலம் கிராம முன்னேற்ற சங்கத் தலைவர்நா.சின்னையாவும் கருத்துரைவழங்கினார். (சோ)

## வரிவிளம்பரம்

### தவறிவிட்டது

குமுழமுனையைச் சேர்ந்த யோன்பிள்ளையெலைச்சன் என்பவரது அடையாள அட்டை (இல.8430 41923-V),பயணஅனுமதி அட்டை, மாணவர் அடையாள அட்டை என்பன பூநகரிக்கும், முழங்காவிலுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பூநகரி வருவாய்ப் பகுதியிலோ /முழங்காவில் வருவாய்ப் பகுதியிலோ ஒப்படைக்குமாறு வேண்டிக்கொள்கின்றார். (6221)

### 10 நிமிடத்தில் படங்கள்!!!

பாஸ்,சகலஅடையாள அட்டைப் படங்கள் உடனுக்குடன் வழங்குகின்றோம். டிஜிற்றல் அல்பம் தயாரிப்பவர்கள்:- யாழ்.ஒளி, K.S.R. PHOTOS இல.05, கனகபுரம் தெரு, கிளிநொச்சி. (6216)

### வீடு வாடகைக்கு விடப்படும்

இரண்டு மாடிக்கட்டடம் சகல வசதிகளுடன் வாடகைக்கு விடப்படவுள்ளது. தனியார். அரச, அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு வழங்கப்படும். தொடர்புகளுக்கு. திரு.விவேகாநந்தராஜா, இல.1622, 2ஆம் வட்டாரம், இரத்தினபுரம், கிளிநொச்சி. (6225)

### தேவை

வளர்ந்து வரும் நிறுவனமொன்றுக்கு அடிப்படை கணினி அறிவுடன் தட்டச்சுத் தெரிந்த பெண் கணினி பயிலுநர் தேவை 05.06.2005 இற்குள் முன் கீழ்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். வி.இல. 6224, ஈழநாதம் பணிமனை, கிளி நொச்சி. (6224)

### தவறிவிட்டது

வெளிப்புலம் சுன்னாகத்தைச் சேர்ந்த கந்தசாமி நிஷாந்தன் என்பவரது அடையாள அட்டை (80042 3511-V),விசேட அடையாளஅட்டை, வேலைத்தளஅட்டை என்பவற்றுடன் பேஸ் ஒன்று கிளிநொச்சிக்கும், 55 ஆம் கட்டைக்கும் இடையில் தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம். (6222)


### தவறிவிட்டது

பனிச்சங்குளம் மாங்குளத்தில் வசிக்கும் மோ.றியோபேட் என்பவரது அடையாள அட்டை(851813969-V) புதுக் குடியிருப்பு மாலதி விளையாட்டரங்கில் தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையில் அல்லது புலிகளின்குரல் நடுவப்பணியகத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். (6218)

## துணுக்காயில் தீப்பற்றி எரிந்து வீடு நாசம்; ஒருவருக்கு எரிகாயம்

(மல்லாவி)

துணுக்காய் விநாயகபுரம் பகுதியில் வீடு ஒன்று தீப்பிடித்து எரிந்து சாம்பராகியுள்ளது. இதில் பெண்ணொருவர் எரிகாயங்களுக்கு உள்ளாகியுள்ளார்.



இச்சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல் 4.30 மணிக்கு இடம் பெற்றுள்ளது. அப்பகுதியைச் சேர்ந்த நாகராசா என்பவரது வீடே எரிந்து நாசமாகியுள்ளது.

இவரதுமனைவியும்,இரண்டு பிள்ளைகளின் தாயுமான நாகராசா இராம்ஜேஸ்வரி (வயது-30) என்பவர் எரிகாயங்களுக்கு இலக்காகியுள்ளார்.இவர் மல்லாவி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.பேதனாவைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார். (24)

## யாழில் தமிழ்த்தினப் போட்டிகள் நான்காம் திகதி நடத்தப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான தமிழ்த்தினப் போட்டிகள் எதிர்வரும் நான்காம் திகதி நடைபெறவுள்ளன.

இப் போட்டிகள் யாழ். வேம்படி மகளிர் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி, யாழ். திருக்குடும்பக் கன்னியர் மடம் ஆகிய பாடசாலைகளில் மூன்று வேறு பிரிவுகளாக நடத்தப்படவுள்ளன.

மூன்று வேறு பிரிவுகளில் ஒரே நாளில் நடத்தி முடிக்கப்படவுள்ள இத் தமிழ்த்தினப் போட்டியின் ஆரம்ப வைபவம் யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் தி.செல்வரத்தினம் தலைமையில் இவ் ஆரம்ப வைபவம் நடைபெறும். இதனைத் தொடர்ந்து மேற்படி மூன்று பாடசாலைகளிலும், போட்டிகள் நடத்தப்படும்.

இப்போட்டிகளில் யாழ்.மாவட்டத்திலுள்ள தீவகம், வடமராட்சி, தென்மராட்சி வலிகாமம், யாழ்ப்பாணம் ஆகிய கல்வி வலயங்களைச் சேர்ந்த பாடசாலைகளின் மாணவர்கள் பங்குபற்றவுள்ளனர். (33)

## உடுவில் மகளிர் கல்லூரியில் தமிழ்விழா

(உடுவில்)

உடுவில் மகளிர் கல்லூரியின் தமிழ்விழா இன்று பிற்பகல் மூன்று மணிக்கு கல்லூரிஅதிபர் திருமதி சிராணி மில்ஸ் தலைமையில் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் யாழ்.மாநகரசபை ஆணையாளர் கலாநிதிக.குணராசா மற்றும் திருமதி கமலாகுணராசா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

தனி, குழுநடனங்கள்,சமூக வரலாற்று நாடகங்கள், கிராமியப் பாடல்கள், வில்லுப்பாட்டுக்கள் என்பன இடம்பெறவுள்ளன. (41)

## உலக சுற்றாடல் தின கருத்தமர்வுக் கூட்டம்

(அலுவலக செய்தியாளர்)

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் உலக சுற்றாடல்தினக் கருத்தமர்வுக் கூட்டம் எதிர்வரும் ஐந்தாம் திகதி இடம் பெறவுள்ளது.

அன்றைய தினம் காலை பத்து மணிக்கு கிளிநொச்சி கலாசாரமண்டபத்தில் மேற்படி கருத்தரங்கு இடம் பெறவுள்ளது.

இந் நிகழ்வில்அனைவரையும் கலந்து சிறப்பிக்கும்வண்ணம் விழாக் குழுவினர் வேண்டியுள்ளனர். (சோ)

## உந்துருளிகள் விபத்து; இருவர் படுகாயம்

(பருத்தித்துறை)

நேற்று முன்தினம் உந்துருளிகள் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் இருவர் காயமடைந்துள்ளனர்.

வடஇலங்கை அதிபர்கள் சங்கத்தலைவரும் மற்றொரு இளைஞருமே படுகாயமடைந்து யாழ். பேதனாவைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் காலை ஒன்பது மணியளவில் இவ்விபத்து பருத்தித்துறை மூத்தவிநாயகர் ஆலயத்திற்கு அருகாமையில் இடம் பெற்றது. நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அதிபர்கள் சங்கத் தலைவருமான எஸ்.சேதுராசா (வயது-49)மற்றும்அவருடன் பயணம் செய்த புலோலி கிழக்கைச் சேர்ந்த க.கிரிசாந் (வயது-18) என்பவர்களே படுகாயமடைந்தனர். (41)


## அலுவலக இடமாற்றம்

திருநகரில் தற்காலிகமாக இயங்கிய எமது கியூடெக்-கரிற்றாஸ் நிறுவன அலுவலகம் 30.05.2005 இலிருந்து 'இன்பகம்' புதிய கட்டடத்திற்கு மாற்றப்பட்டுள்ளது என்பதை சகலருக்கும் அன்புடன் அறியத் தருகின்றோம்.

"நன்றி"

அருட்பணி ஞா.பீற்றர்
இயக்குனர்,
கியூடெக்-கரித்தாஸ்நிறுவனம்,
வன்னி.

(6223)

## பெண்கணக்காளர் தேவை

வடமராட்சி,மந்திகை எரிபொருள்நிரப்பு நிலையத்திற்கு பெண் கணக்காளர் உடன்தேவை.

சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு:- திரு.ஜெயபாலன்,
எரிபொருள் நிரப்பு நிலையம்,
மந்திகை.
T.P 0777701315

(சி.12170)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எந்திரி கந்தையா ஜெயவீரசிங்கம்
பிரதம பொறியலாளர்,
வீதிஅபிவிருத்தித்திணைக்களம்,
முல்லைத்தீவு,கிளிநொச்சி.



முல்லைத்தீவு நிகொட் திட்டப்பணிமனையில் மூன்று வருடங்களாக திட்டப்பொறியியலாளராகப் பணியாற்றி இன்று கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் வீதி அபிவிருத்தித் திணைக்கள பிரதம பொறியியலாளராகப் பதவியேற்கும் எந்திரி திரு.கந்தையா ஜெயவீரசிங்கம் அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.



நண்பர்கள்,
முல்லைத்தீவு.

(சி.12028)

## 'அல்-அயம்' நாளேட்டிற்கு சுதந்திர பத்திரிகைக்கான விருது

சூடானில் வெளியாகும் மிகவும் பழமை யான 'அல்-அயம்' நாளேட்டுக்கு பத்திரிகைச் சுதந்திரத்துக்கான தங்கப் பேனா விருது வழங்கப்பட்டுள்ளது.

தென் கொரியத் தலைநகர் சியோலில் திங்கட்கிழமை நடந்த உலக பத்திரிகைகள் சங்க விழாவில் இந்த விருது சூடான் பத்திரி கையின் உரிமையாளர் மகௌப் மொகமது சாலியிடம் வழங்கப்பட்டது.

விருதை உலக பத்திரிகை ஆசிரியர்கள் சங்கத்தின் தலைவர் ஜோர்ஜ் பிராக் வழங்கித் தெரிவிக்கையில்; பத்திரிகைச் சுதந்திரத்தை நசுக்கும் அனைத்துச் சட்டங்களையும் நீக்குமாறு சூடான் அரசுக்கு பிராக் வேண்டுகோள் விடுத்தார்.

சூடான் அரசின் அடக்குமுறை, அரசின் தொல்லை, பத்திரிகையாளர்கள், உரிமை யாளர்களைக் கைது செய்வது மற்றும் பத்திரி கையை மூடிவிடுவோம் போன்ற அச்சுறுத்தல் களை எதிர்கொண்ட பத்திரிகைக்கு இந்த விருது கிடைத்துள்ளது.என்றார்

## உணவு விடுதி தீவிரவாதிகளால் தீக்கிரை கராச்சியில் ஆறு பேரின் உடல்கள் மீட்பு

பாகிஸ்தானில் சியா முஸ்லிம்களின் பள்ளிவாசலில் நடைபெற்ற தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் நோக்கில் கராச்சியிலுள்ள உணவு விடுதி மீது தீவிரவாதிகள் தீவைத்துக் கொளுத்தியுள்ளனர் அதனால் அவ்விடுதி தீப்பற்றியதாகவும் அதிலிருந்து ஆறு உடல்கள் மீட்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வெள்ளியன்று சியாமுஸ்லிம் பள்ளிவாசலில் நடத்தப்பட்ட குண்டுத்தாக்கு தலில் ஐந்து பேர் பலியாகியும்; 20 பேர் காயமடைந்தும் உள்ளனர். இதனைக் கண்டிக்கும் வகையில் நடைபெற்ற தாக்குதலில் இரு பொது மக்களும், ஒரு பொலிசாரும் காயமடைந் தனர்.

கடந்த வெள்ளியன்று இஸ்லாமபாத்தில் புனிதத் தலம் ஒன்றில் நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலில் 19 பேர் கொல்லப் பட்டும்; நூற்றிற்கும் மேற்பட்டோர் காயமடைந் தும் உள்ளனர்.

நேற்று முன்தினம் நடைபெற்ற இச்சம்ப வத்தில் தாக்குதல் நடத்திய இருவரும் பொலி சார் ஒருவரும் கொல்லப்பட்டுள்ளனர். தீவிர வாதிகளில் ஒருவர் தடை செய்யப்பட்ட ஜயிஸ் இமொகமட் தீவிரவாத அமைப்பைச் சேர்ந்தவர் என இனங்காணப்பட்டுள்ளார்.

இச்சம்பவங்களுக்குப் பழிவாங்கும் நோக் கிலேயே நேற்றுக் கராச்சியிலுள்ள உணவு விடுதி மீது தீவிரவாதிகள் தீ வைத்திருக்கின்றனர் சம்பவம் நடைபெற்றபோது சுமார் 18 பேர் வரைஅக்கட்டடத்தினுள் இருந்ததாக சாட்சியங் கள் தெரிவிக்கின்றன.

இதனையடுத்து அனைத்துப் பள்ளிவாசல் களையும் மூடிவிடுமாறும் அவற்றுக்கருகில் வாகனங்கள் நிறுத்தப்படக்கூடாது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.



தீப்பற்றி எரியும் உணவு விடுதியையும் குண்டு வெடித்த நிலையில் பள்ளிவாசலையும் படங்களில் காணலாம்.



கைபாவின் கைத்தொழில் வலயத்தினுள் நேற்று காலை வேளைதிடீரென உட்புகுந்து அமெரிக்க ஈராக்கியப் படையினர் இணைந்து தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

## பிரான்சின் முடிவு மாறுபட்டதாயிருப்பினும் பொது அரசியல் சட்டத்துக்கான போராட்டம் தொடரும்

(பரிஸ்)

***ஐரோப்பிய கூட்டமைப்பு நாடுகளுக்கு பொதுவான அரசியல் சட்டம் தேவை என்ற முடிவில் பிரான்சின் முடிவு மாறுபட்டதாக இருந்தாலும் பொது அரசியல் சட்டத்துக்கான பிரசாரம் ஐரோப் பாவில் தொடரும் என ஐரோப்பிய கூட்டமைப்பு நாடுகளின் தலைவர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.***

ஐரோப்பிய கூட்டமைப்பு நாடுகளுக்கு பொதுவான நாணயமாக 'யூரோ' புழக்கத்தில் உள்ளது. இதேபோல பொதுவான அரசியல் சட்டத்தை அமுல்படுத்தலாமா வேண்டாமா எனக் கூட்டமைப்பு நாடுகளில் கருத்துக்கணிப்பு நடத்த முடிவு செய்யப்பட்டது. இதுவரை கருத்துக்கணிப்பு முடிந்த ஒன்பது நாடுகள் அதற்கு ஆதரவளித் துள்ளன. பிரான்ஸ் அதிபர் ஜாக்குஸ் சிராக் பொது அரசியல் சட்டத்துக்கு பெரும் ஆதரவளித்து வருகிறார்.

இக்கருத்தை முன்வைத்து பிரான்சில் கடந்த ஞாயிறன்று கருத்துக்கணிப்பு நடந்தது 80 சதவீத மக்கள் மிகுந்த ஆர்வத்துடன் இதில் பங்கேற்றனர். நேற்று முன்தினம் முடிவுகள் அறிவிக்கப்பட்டன. பொதுவான அரசியல் சட்டத்துக்கு எதிராக 55 சதவீதமும், ஆதரவாக 45 சதவீதமும் வாக்குகள் கிடைத்தன. பிரான்ஸ் அதிபரின் முயற்சிக்குக் கிடைத்த மிகப்பெரிய தோல்வியாக இது கருதப்படுகிறது.

பிரான்ஸ் வெளியுறவு அமைச்சர் மைக்கல் பார்னியர் கூறுகையில்; இது மிகப்பெரிய சோகம், பெருத்த ஏமாற்றம் என்றார் பாதுகாப்பு அமைச்சர் மைக்கல் அலியாட் மேரி கூறுகையில்; இது பிரான் சிற்கும் ஐரோப்பாவிற்கும் கிடைத்த தோல்வி என்றார்.

அதிபர் சிராக் கூறுகையில்; பிரான்ஸ் நாட்டின் நலனுக்காக நான் தொடர்ந்து குரல் கொடுப்பேன் அதற்கு இந்த முடிவு தவிர்க்க முடியாத இக்கட்டான நிலையை உருவாக்கி இருக்கிறது என்றார். பிரான்சில் நிலவும் வேலைவாய்ப்பு நெருக் கடியும் இக்கட்டான பொருளாதார சூழ்நிலையும் தான் இந்தத் தோல் விக்குக் காரணம் என அதிபர் கருது கிறார். அந்நாட்டு பிரதமரை நீக்கி விட்டு உள்துறை அமைச்சரவை புதிய பிரதமராக அதிபர் சிராக் நியமிப்பார் என்ற பரவலான கருத்து நிலவுகிறது.

பிரான்சின் முடிவு மாறுபட்டதாக இருந்தாலும் பொது அரசியல் சட்டத்துக்கான பிரசாரம் ஐரோப்பாவில் தொடரும் என ஐரோப்பிய கூட்டமைப்பு நாடுகளின் தலைவர்கள் கருத்து தெரிவித் துள்ளனர்.ஜேர்மன் அதிபர் ஷ்ரோடர் கூறுகையில; பிரான்சில் முடிவு பின்னடைவுதான் ஆனால் பொது அரசியல் சட்டத்துக்கான எல்லாக கதவுகளும் மூடப்பட்டதாக பொருளல்ல என்றார்.

## ஈராக்கில் இரண்டு தற்கொலைத் தாக்குதல் ஓய்வுபெற்ற கொமாண்டோக்கள் 25 பேர் பலி

ஈராக்கில் ஓய்வுபெற்ற பொலிஸ் கொமாண்டோக்களுக்கு குறிவைத்து தற்கொலைப் படைத்தாக்குதல் நடத்தியதில் 25 பேர் கொல்லப்பட நூற்றிற்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர்.

இரண்டு மாதங்களுக்கு முன் வேலை இழந்த பொலிஸ் கொமாண்டோக்கள் சுமார் 500 இற்கும் மேற்பட்டவர்கள் அரசு அலுவலகத்தின் வெளிப்பகுதியில், தங்களது சம்பள நிலுவையைப் பெறக் கூடியிருந்தனர். அப்போது அங்கு வந்த இரண்டு தற்கொலைப் படைத் தாரிகள் உடலில் கட்டியிருந்த குண்டுகளை வெடிக்கச் செய்து இந்தத் தாக்குதலை நடத்தியதாகப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

## மருந்து,அழகுசாதனப் பொருள் விளம்பரத்தில் நடிகைகள் பங்குபற்ற சீன அரசு தடை

(பீஜிங்)

அழகுசாதனப் பொருட்கள் உள்ளிட்ட மருந்துப்பொருட்களின் விளம்பரப் படங்களில் நடிப்பதற்கு தொலைக் காட்சி நடிகைகளுக்கு சீன அரசு தடைவிதித்துள்ளது.


பல்வேறு பெரிய வியாபார நிறுவனங்கள் தங்களது உற்பத்திப் பொருட்களை விளம்பரப்படுத் துவதற்கு பிரபல தொலைக்காட்சி மற்றும் சினிமா நடிகைகளைப் பயன்படுத்திக்கொள்வது வழக்கம். நடிகைகளும் விளம்பரப் படங்களில் மிகுந்த ஆர்வத்துடன் நடித்து வருகின்றனர். இத்தடை பீஜிங்கில் அமுலாகிறது.

கல்சியச் சத்து அடங்கிய பானத்தைப் பருகுவது தொடர்பாக தலைநகர் பீஜிங்கில் விளம்பரப்படம் ஒன்று சமீபத்தில் ஒளிபரப்பப்பட்டது. இந்த விளம்பரப் படத்தில் இளம் தொலைக்காட்சி நடிகை சென் நடித்துள்ளார். விளம்பரப்படத்தில் குறிப்பிட்ட கல்சியம் சத்துப் பானத்தைப் பருகுவதன் மூலம் அந்த நடிகையின் குழந்தை அழகாகவும், உயரமாகவும் வளர்வது போன்றும் உடனே அந்த நடிகை அவளது வீட்டிலுள்ள கரடிப் பொம்மையிடம் முட்டாளே கல்சியம் சத்துப்பானத் தைப் பருகு என்று செல்லமாகக் கூறுவது போலவும் விளம்பரத்தில் காட்சி அமைக்கப்பட்டுள்ளது.

இந்த விளம்பரம் அனைத்துக் குழந்தைகளும் கல்சியச் சத்துப் பானத்தைப் பருகவேண்டும் என்ற தவறான நடைமுறையைப் பொது மக்கள் மத்தியில் எடுத்துச்செல்லும். ஆகவே அந்த விளம்பரத்தை உள்ளூர் தொலைக்காட்சி நிறுவனங் கள் ஒளிபரப்பக்கூடாது நடிகை நடிக்கும்விளம்பரப் படங்கள் அதிகமாகப் பொதுமக்கள் கவனத்தை ஈர்ப்பதோடு மட்டுமன்றி குறிப்பிட்ட பொருட்களின் விற்பனையும் அதிகரிக்கும். குறிப்பாக நடிகைகள் செய்யும் செயலை பொதுமக்களும் செய்யத் தூண்டப்படுவார்கள். அதனால் பல்வேறு தீய விளைவுகள் ஏற்படும் ஆகையால் மருந்துப் பொருட்கள், அழகுசாதனப் பொருட் கள், விளம்பரங்களில் நுகர்வோர் போல நடிகைகள் நடிக்கக் கூடாது. இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.



ஆலிங்ரன் மேற்குகவிலில் அமைந்துள்ள நினைவாலயத்தில் 2004 இல் ஈராக் கில் கொல்லப் பட்டதனது மகனின ஞாபகக் கல்லறைக்கு அமொிக்கர் ஒருவர் வணக்கத்தைச் செலுத்துகின்றார்.



அன்சர் அல்-இஸ்லாம் என்ற பயங் கரவாத அமைப்பிற்கும் புதிதாக ஆட்களையும், நிதியினையும் சேர்த்தார் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட ஈராக் அமின்லொக்மன் முகமட் என்பவர் பொலி சாரி னால் ஜேர்மனியில் மியூனிச் நீதி மன்றிற்கு கொண்டு செல்லப்படு கின்றார்.

## மிஸ் யுனிவர்ஸ் அழகியாக கனடா அழகி தெரிவானர்

மிஸ் யுனிவர்ஸ் அழகியாக கனடாவைச் சேர்ந்த நாதலியா ஜெலபோவா தெரிவானார்.

54ஆவது மிஸ் யுனிவர்ஸ் அழகிப்போட்டி தாய்லாந்து நாட்டின் தலைநகரான பாங்கொக்கில் நேற்றுக் காலை நடந்தது. இதில் இந்திய அழகி அம்ரிதாதாபர், போர்ட்டே ரிக்கோ அழகி சிந்தியா ஓல்வரியா, டொமினிக்கன் குடியரசு அழகி ரெனதா சோனே, கனடா அழகி நாதலியா, வெனிசுலா அழகி மோனிக்கா ஆகியோர் உட்பட 81 நாட்டைச் சேர்ந்த அழகிகள் கலந்து கொண்டனர்.



# சமாதான காலத்தைப் பயன்படுத்தி எதிரி ஆத்திரமூட்டும் செயல்களில் தீவிரம்

## -கிளி.மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தலைவர்

(அலுவலக செய்தியாளர்)

**எதிரியானவன் சமாதானக் காலத்தைப் பயன்படுத்தி எம்மீது ஆத்திர மூட்டும் வகையில் சீண்டுதல்களை முனைப்புடன் மேற்கொண்டு வருகி றான். இதனை முறியடித்து எமது சுதந்திரத்தைப் பெற்றுக்கொள்ள நாம் அனைவரும் ஒன்று பட்டு தேசியத்தலைவரின் கரங்களைப் பலப்படுத்த திடசங்கற்பம் பூணுவோம்.**

இவ்வாறு நேற்று முன்தினம் கிளிநொச்சி கண்டாவளைப் பிரதே சத்தில் நடைபெற்ற மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு, வீரமுரசு நிகழ்வில் கிளி. மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங் களின் இணையத்தலைவர் இ.கணே சபிள்ளை கலந்துகொண்டு உரை நிகழ்த்துகையில் தெரிவித்தார்.


அவர் மேலும் தெரிவிக்கையில்; வெளிநாட்டு கூட்டுச்சக்தியோடு அரச இயந்திரம் பலப்படுத்தப்பட்டதே அல் லாது. எமது மக்களுக்காக எதுவித நன்மையையும் வழங்கவில்லை. இந்த சமாதான காலத்தில் 193 நிறு வனங்கள் உதவிசெய்வதாக உறுதி அளித்த நிலையிலும் ஒருவரும் உதவிசெய்யாத நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். எமது தலைவர் சமாதானம் முறிவடையக்கூடாது என்ப தற்காகவே பொறுமை காத்து வரு கின்றார். இந்தக்காலத்திலேயே நாம் பத்திரிகையாளர்கள், ஊடகவியலா ளர்கள், போராளிகள், பொதுமக்கள் எனப் பலதரப்பட்டவர்களையும் இழந்து வருகின்றோம்.

இன்றைய சூழ்நிலையில் எல் லாம் முடிந்து விட்டதாகவே உணரு கின்றோம். நாம் சிந்தித்துச் செயலாற் றவேண்டிய காலம் வந்துவிட்டது. அதை ஒத்திப்போடமுடியாத நிலைக் குத் தள்ளப்பட்டுள்ளோம். எமது பலத்தை மீண்டும் உலகிற்குக்காட்ட அனைவரும் அணிதிரள்வோமெனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் கிளி.மாவட்ட தேசிய எழுச்சிப்பேரவைச் செயலாளர் பசுபதிப்பிள்ளை, தூயவன் அரசறிவி யற்கல்லூரி புலிமறவன் மாஸ்ரர் ஆகியோர் சிறப்புரையை வழங்கினர், மாணவ, மாணவியரின் சிந்து நடைக்கூத்து, கவிதை,பாட்டு கலை நிகழ்ச்சிகள் என்ன நடை பெற்றன. முன்னதாகக் கண்டாவளைப் பிரதே சத்தில் மாவீரர் பெற்றோர் கௌர விப்பும், வீரமுரசு கலை நிகழ்ச்சி களும் நேற்று முன்தினம் கந்தசுவாமி தலைமையில் ஆரம்பமாகியது. முத லாவதாக மாவீரர் பெற்றோர்கள் பிரதான வீதி வழியாக பாண்ட் வாத்திய இசையுடன் கண்டாவளை மகாவித்தியாலயம் முன்பாக அமைக் கப்பட்டுள்ள மாவீரர் நினைவாலயத் திற்கு அழைத்து வரப்பட்டனர்.

தொடர்ந்து பொதுச்சுடரினை கண்டாவளைப் பிரதேச செயலர் சத்தியசீலன், கிளிநொச்சி மாவட்ட தேசிய எழுச்சிப்பேரவைச் செயலாளர் பசுபதிப்பிள்ளை ஆகியோர் ஏற்றி வைக்க, தமிழீழ தேசியக் கொடி யினை கிளிநொச்சி மாவட்ட அரசி யல்துறைப்பொறுப்பாளர் செ.கலை வாணன் ஏற்றிவைத்தார்.

முதலாவது பொதுப்படத்திற்கான ஈகச்சுடரினை கிராமசேவையாளர் பத்மநாதன் ஏற்றிவைக்க, கிராம சேவையாளர் பரமதாஸ் மலர்மாலை யினை அணிவித்தார். முதலாவது மாவீரர் சங்கரியின் படத்திற்குக் கண்டாவளை தே.எ.பே.செயலாளர் யோகநாதன் ஈகச்சுடரினை ஏற்றி வைக்க, கிராமசேவையாளர் சண்முக நாதன் மலர்மாலையினை அணி வித்தார். (சோ,14)



சத்ஜெய இராணுவ நடவடிக்கையின் போது இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலினால் கிளிநொச்சி இந்துக்கல்லூரியின் இரண்டாம் மாடிச் சுவரில் ஏற்பட்ட பெரிய ஓட்டை இதுவரை திருத்தப்படாதுள்ளது. (படம்:சோதி)

# கிளிநொச்சி மாவட்ட நெல்வயல்களில் அறக்கொட்டியான் தாக்கம் அதிகரிப்பு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட சிறுபோக நெல்வயல்களில் பயிர்களின் இளம் பராயத்தில் அறக்கொட்டியான் புழுவின் தாக்கம் பரவலாகக் காணப்படுவது அவதானிக்கப்பட்டுள்ளது.

இத்தாக்கம் ஆரம்பித்து ஓரிரு நாட் களிலேயே முழுவயலிலும் உள்ள பயிர்கள் மாடு மேய்ந்தது போன்ற நிலையில் காணப்படும்.

இதன் அந்துகள் கடும் கபில நிற மானவை. இறகுகளின் நுனி விளிம் பில் நரை நிறமான அலை போன்ற கோடும், மஞ்சள் நிறமான புள்ளிகளை யும் கொண்டிருப்பதுடன் கபில அல் லது நரை நிறமான முன் இறகுகளை யும், வெள்ளை நிறமான பின் இறகு களையும் கொண்டவை.

இதன் முட்டைகள் பொரித்துப் புழுக்கள் வெகுவேகமாகப் பரவுவது டன், அதிக சேதத்தையும் இப்பரு வமே ஏற்படுத்துகின்றது. எனவே இத னைக் கட்டுப்படுத்துவதற்கு பின்வரும் கட்டுப்பாட்டு முறைகளைக் கடைப் பிடிக்கும் வண்ணம்கிளிநொச்சிமாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் திரு மதி சீ. ஆனந்தராசா கேட்டுக்கொண் டுள்ளார்.

நீரைப் பயிரின் மட்டத்திற்குத் தேக்கி மண்ணெய் கயிறு இழுத் தல், பின் நீரை வடியவிடல், வயல் பகுதியை சூழவுள்ள களைகளை அகற்றல்.

இரசாயனக் கட்டுப்பாட்டு முறை யாவன.குளோரோபைரி பொஸ்35மி. லீற்றர் 10 லீற்றர் நீரில், பென்தியோன் 30-40 மி.லீற்றர் 10 லிற்றர் நீரில் கலந்து அதிகாலையில் அல்லது மாலை வேளைகளில் பூச்சி நாசினி விசுறல் வினைத்திறனானது எனவும் தெரிவித்துள்ளார். (சோ)

# வட்டக்கச்சியில் ஒக்ஸ்பாம் நிறுவனம் விவசாயிகளுக்கு கடனுதவி

(வட்டக்கச்சி)

ஒக்ஸ்பாம் நிறுவன நிதியுதவியுடன் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் ஆதரவுடன் கிளி. கிழக்கு புனர்வாழ்வு நிறுவனத்தால் நடைமுறைப் படுத்தப் படும். கடனுதவிகளுக்கு பயனாளிகள் ஆலடிக்கிராமத்தில் தெரிவு செய்யப்பட் டனர். இதன் அடிப்படையில் இரண்டு பயனாளிகளிற்கு நீர் இறைக்கும் இயந்திரமும் இருவருக்கு மருந்து தெளிகருவிகளும் சுயதொழில் ஊக்கு விப்பிற்காக ஐந்து பயனாளிகளுக்கு தலா 15000 ரூபாயும் வழங்கப்பட்டன. (12)

# வருமான அதிகரிப்புத் திட்டத்தின் கீழ் மாவடிக்கிராம மக்களுக்கு உதவி

– ஏனைய கிராமங்களுக்கும் வழங்க ஏற்பாடு

(வட்டக்கச்சி)

போரூட் நிறுவன நிதி உதவியுடன் கிளி. கிழக்கு புனர்வாழ்வு நிறுவனத் தினரால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் வருமான அதிகரிப்புத்திட்டத்தின் கீழ் நிதியுதவி வழங்கப்பட்டு வருகின்றது. இதன் அடிப்படையில் நன்னீர் மீன்பிடிக்கு ஒரு பயனாளிக்கு 13600 ரூபாவும், கோழி வளர்ப்புக்கு ஐந்து பயனாளிகளுக்கு தலா 10,400 ரூபாவும், இரண்டு பயனாளிக்கு ஒவ்வொன்றும், 17700 ரூபாய் பெறுமதியான தையல் இயந்திரமும், சிறுவியாபாரங்கள், பாய்க்கடைக்கு 15000 ரூபாவும், மரக்கறி வியாபாரம் 10,000 ரூபாவும், தேங்காய் வியாபாரம் 15000ரூபாவும், ஆடுவளர்ப்பு எட்டு பயனாளிக்கு தலா 12300 ரூபாவும் வழங்கப்பட்டன. இத்திட்டத்தினால் மக்கள் பயனைப் பெற்று வருகின்றனர். அத்தோடு மற்றைய கிராமங்களுக்கும் பயனாளிகள் தெரிவு இடம் பெறவுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (12)

# நீதிமன்று உத்தரவிட்டும் உப்பள பணியாளருக்கு சிறிலங்கா அரசாங்கம் சம்பளம் வழங்கவில்லை

(வவுனியா செய்தியாளர்)

ஆனையிறவு, குறிஞ்சாத்தீவு ஆகிய இரு உப்பளங்களிலும் கட மையாற்றிய 190 பணியாளர்களுக் கும் சம்பளம் வழங்குமாறு நீதி மன் றம் பணித்திருந்தும் 1997 ஆம் ஆண் டின் பின் சம்பளக் கொடுப்பனவு உட்பட எவ்விதமான கொடுப்பனவு களும் வழங்கப்படவில்லை என பணியாளர்கள் கவலை தெரிவித் துள்ளனர்.

1990 ஆம் ஆண்டு காலப்பகுதி யில் ஏற்பட்ட போர் அனர்த்தம் கார ணமாக ஆனையிறவு குறிஞ்சாத்தீவு உப்பளங்களின் செயற்பாடுகள் செயல் இழந்தன. அப்போது இவற் றில் கடமையாற்றிய 270 பணி யாளர்களில் பலர் சேவையில் இருந்து ஓய்வு பெற்றும் வெளிநாடு சென்றும் இறந்தும் உள்ளனர். இந் நிலையில் தற்போது 190 பணி யாளர்கள் சம்பளம் பெறத் தகுதியான நிலையில் உள்ளபோதும் இவர் களுக்கு கடந்த 1997 ஆம் ஆண்டின் பின் சம்பளக் கொடுப்பனவு உட்பட எந்தவிதமான கொடுப்பனவுகளும் வழங்கப்படவில்லை என அங்கு கட மையாற்றிய பணியாளர்கள் தெரி வித்துள்ளனர்.

ஆனையிறவு,குறிங்சாத்தீவு உள் பளங்களில் கடமையாற்றும் பணி யாளர்கள் தமக்கு சம்பளக் கொடுப் பனவுகள் வழங்கப்படவேண்டுமென கோரி நீதி மன்றில் வழக்குத்தாக்கல் செய்திருந்தனர். இவர்களின் வழக்கு விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட பின் பணியாளர்களுக்கு 1998 ஆம் ஆண்டு சனவரி மாதம் முதல் 2004 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை யான காலப்பகுதிக்குரிய சம்பளக் கொடுப்பனவுகள் பணிக்கொடை, ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம் பிக்கை நிதி என்பவற்றை அரசு உட னடியாக வழங்க வேண்டும் என நீதி மன்றம் தீர்ப்பளித்தது. எனினும் நீதி மன்ற தீர்ப்பிற்கமைய தமக்கு இது வரை கொடுப்பனவுகளை அரசாங்கம் வழங்கவில்லை எனப் பணியாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

# மாணவ[illegible] எழுச்சி நாளை முன்[illegible]ட்டு இசைவும் அசைவும் கலை நிகழ்[illegible]வு

(மன்னார்)

க[illegible]ங்கண்டல் [illegible] க. பாடசாலையில் நேற்று முன்தினம் காலை 10.00 மணிக்கு [illegible]ணவர் எழுச்சி நாளை முன்னிட்டு இசைவும் அசைவும் என்ற கலை நிகழ்வு இடம் பெற்றது.

தமிழீழ விடுதலைப்போராட்டத்தில் இடம் பெற்ற சாதனைகளை பிரதி பலிக்கும் வகையில் இக் கலை நிகழ்வு இடம் பெற்றது. இதில் பாடசாலை [illegible]ணவர்கள், ஆசிரியர்கள்,அதிபர்கள்,பிரதேச பொறுப்பாளர்கள், மாணவர் [illegible]மைப்பு பொறுப்பாளர் உட்பட பலர் கலந்து கொண்டனர். (18)

# யாழ். மாவட்டத்தில் நிகொட் திட்ட நிதிப்பங்களிப்புடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் வீடுகள் கையளிப்பு

போர்ச்சூழல் காரணமாகவும் சமூகப் பொருளாதார ரீதியாக மிகவும் பின் தங்கிய நிலையில் வாழ்ந்துவரும் மக்களுக்கு நிரந்தர வீடுகளை அமைத்துக்கொடுத்து, அவர்களது வாழ்வாதாரங்களை மேம்படுத்தும் நோக்கில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தொடர்ச்சியாக தனது வேலைத் திட்டச் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றது. அந்தவகையில் சாவகச்சேரிப் பிரதேச செயலர் பிரிவி லுள்ள எட்டு கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த 125 குடும்பங்களுக்கு நிகொட் திட்ட நிதிப்பங்களிப்புடன் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் வீடுகளை அமைத்து கடந்த ஞாயிற்றுக்கிழமை உரியவர்களிடம் கையளிக்கப்பட்டுள் ளன.

மந்துவில் மேற்குச் சூரியகுமாரன் சனசமூக நிலை யத்தில், தமிழர் புனர் வாழ்வுக் கழகத்தின் யாழ் மாவட்டப் பணிப்பாளர் சு. ஜெயராஜ் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது. யாழ். மாவட்ட அரச அதிபர் கே. கணேஸ் பிரதம விருந்தினராகவும், சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் இளம்பரிதி, நிகொட் பிரதித்திட்டப் பணிப்பாளர் நவரட்ணராஜா, பாராளுமன்ற உறுப்பினர் ரவிராஜ், தென்மராட்சி தமிழர் புனர்வாழ்வுக் கழகத் தலைவர் சந்திரசேகரா ஆகியோர் கலந்து கொண்டனர்.

அருட்திரு கருணாரட்ணம் அடிகளார், கியூமெடிக்கா நிறுவனத்தின் இயக்குநரான அருட்திரு. ஜெயக் குமார் அடிகளார், மௌலவி பாஸ் சுபியான், சங்கீதபூஷணம் கலாநிதி என்.வி.நவரட்ணம் ஆகியோர் ஆசியுரைகளை வழங்கினர். சிறப்பு விருந்தினர்களின் சிறப்புரைகளைத் தொடர்ந்து அரச அதிபரினால் சம்பிரதாய பூர்வமாக வீடுகள் திறந்துவைக்கப்பட்டன. அத்தோடு பயனாளி களுக்கான ஆவணங்களும் வழங்கப்பட்டன. கலாநிதி. க. குணராஜா, கலாநிதி. நித்தியானந்தன், யாழ். மாவட்ட அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் கண்ணன் உட் படப் பலர் கலந்துகொண்டனர். இதே தினம் யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள சூரியவெளி, மீனாட்சிபுரம், வில்லூன்றி ஆகிய கிராமசேவையாளர் பிரிவுகளைச் சார்ந்த 130 குடும்பங்களுக்கு யாழ். மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகப்பணிப்பாளர் ஜெயராஜ் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வீடுகள் கையளிக் கப்பட்டன. பிற்பகல் 3.00 மணியளவில் நாவாந்துறை யிலும், மாலை 5.00 மணியளவில் கொட்டடியிலும் நடைபெற்ற இருநிகழ்வுகளிலும் பிரத மவிருந்தினராக யாழ் அரச அதிபர் கணேஸ் அவர்களே கலந்துகொண் டார். சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட துணை அரசியல்துறைப் பொறுப்பாளர் கண்ணன், யாழ் மாந கரசபை ஆணையாளர் கலாநிதி க. குணராஜா, நிகொட் திட்டப் பிரதித் திட்டப்பணிப்பாளர் நவரட்ணராஜா, பாராளு மன்ற உறுப்பினர் திருமதி பத்மினி சிதம்பரநாதன், தேசிய



எழுச்சிப் பேரவைச் செயலாளர் சொலமன் சூ.சிறில், டாக்டர் எஸ்.எஸ். அருளானந்தம், ஐக்கிய நாடுகள் சபை யின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயத்தின் (யு.என்.எச்.சி. ஆர்) பிரதிநிதி பாலகிருஸ்ணன் ஆகி யோர் கலந்துகொண்டனர். அரசாங்க அதிபராலும், அரசி யல்துறைப் பொறுப்பாளராலும் சம்பிரதாயபூர்வமாக வீடு கள் திறந்துவைக்கப்பட்டன. வீடுகளுக்கான ஆவணங் களும் பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டன. இடம் பெற்ற மூன்று நிகழ்வுகளிலும் பாடசாலை மாணவர்கள், போராளி கள், பொது மக்களெனப் பெருமளவானோர் கலந்து சிறப் பித்தனர்.

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# இராணுவ அடக்குமுறைக்குள் எவ்வாறு மகிழ்ச்சியான கல்வியைக் கற்கமுடியும்?

## -சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை கேள்வி

(யாழ்ப்பாணம்)

**சிறிலங்கா அரசின் கல்விக் கொள்கையில் முதன்மைப்படுத்தப்படுவது 'மகிழ்ச்சியான கல்வி' என்பதே ஆகும். ஆனால் தமிழ் மாணவர்களைப் பொறுத்தவரை இது பொய்த்துவிட்டது. இராணுவ ஆயுதங்களுக்கு மத்தியில் இராணுவச்சீருடை, இராணுச்சப்பாத்துக்களுக்குக் கீழ் இருந்து எவ்வாறு மகிழ்ச்சியான கல்வியைக் கற்கமுடியும் என சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை கேள்வி எழுப்பியுள்ளது.**

தமிழீழ மாணவர் எழுச்சிநாளை முன்னிட்டு "நசிந்து இனி கிடக்கமாட்டோம். நாம் எல்லாம் நிமிர்ந்து நிற்போம்" என்ற மகுடத்தின் கீழ் வெளியிட்டுள்ள அறைகூவலிலேயே இவ்வாறு கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

இன்றுவரை பல பாடசாலைகள் இராணு முகாம்களாகவே உள்ளன. இன்னும் பல பாடசாலைகள் இராணுவ உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் இராணுவ ஆக்கிரமிப்பின் நடுவிலேயே இயங்கி வருகின்றன. சில பாடசாலைகளில் மாணவர்களைப் பெற்றோரே சென்று சந்திப்பதற்குச் சிங்களப் படையினரிடம் அனுமதி பெறவேண்டிய நிலையுள்ளது. காலையிலும், மாலையிலும் இராணுவச் சோதனைச்சாவடியைத் தாண்டிச் செல்கின்ற மாணவனால் எவ்வாறு மகிழ்ச்சியாகக் கற்றுக்கொள்ள முடியும். அதுவும் சஞ்ஜீவன், கிருஷாந்தி போன்ற எமது சக மாணவர்களைச் சுட்டும், பாலியல் வல்லுறவுக்குட்படுத்தியும், வாகனங்களால் மோதியும் கொலை செய்த இராணுவத்தினரையும் எம்மைக் கைது செய்து சித்திரவதைகள் இன்றுவரை செய்கின்ற இராணுவத்தினரையும், அவர்களின் காவலரண்களையும் தாண்டிச்சென்று எப்படி மகிழ்ச்சியான கல்வியை எம்மால் கற்க முடியும்.

கடந்த மூன்று தசாப்தங்களுக்கு முன்னரே தமிழ் மாணவர் சமூகத்தவராகிய நாம் எம் மீது திணிக்கப்பட்ட அடக்கு முறைகள், அராஜகங்களுக்கு எதிராகக் குரல் கொடுக்கத்தொடங்கிவிட்டோம். ஆனால் அன்று தமிழ் மாணவர்கள் மீது தரப்படுத்தலில் ஆரம்பித்த சிறிலங்கா அரசாங்கத்தின் திணிப்புக்கள் மூன்று தசாப்தங்களின் பின்னரும் மாற்றமடையவில்லை. அது இன்றுவரை வெவ்வேறு வடிவங்களில் திணிக்கப்பட்டே வருகின்றன.

குறிப்பாக தமிழ் மாணவர்கள் கல்வி கற்கப்பயன்படுகின்ற புத்தகங்களில் திட்டமிட்டே சிறிலங்கா அரசினால் எழுத்துப் பிழைகளுடனும், கருத்துவேறுபாட்டுடனும் வழங்கப்பட்டு வருகின்றது. இதற்கு மேலாக வரலாறுகள் திரிபுபடுத்தப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் கல்வி கற்றதமிழ் மாணவர்கள் கந்தளாய்குளம், குளக்கோட்டன் என்ற தமிழ் மன்னனால் கட்டப்பட்டது என்ற வரலாற்றை இதே சிறிலங்கா அரசினால் வழங்கப்பட்ட பாடநூல்களில் கற்றவர்கள். ஆனால் இன்று சில ஆண்டுகளாக அதே குளத்தைச் சிங்கள மன்னன் ஒருவன் கட்டியதாக வரலாறுகள் எம் கண்முன்னே திரிபுபடுத்தப்பட்டுள்ளது. இது ஒரு சிறு உதாரணம் மட்டுமே. இவ்வாறாக சிறிலங்காஅரசு கல்வி என்ற தனது கொள்கை ஊடாக எம்மீது எமது வரலாறுகளைத் திரிபுபடுத்தி திணிக்க எண்ணுகின்றது.

இவ்வாறான கொடுமைகளுக்கு எதிராகவே இற்றைக்கு மூன்று தசாப்பதங்களுக்கு முன்னர் மாணவனாக விளங்கிய தியாகி பொன்சிவகுமாரன போராடி வீரச்சாவடைந்தார். அதே வழியில் எம்மீது திணிக்கப்படுகின்ற அடக்கு முறைகள், அராஜகங்கள்,* கலாச்சாரச் சீரழிவுகள், தரப்படுத்தல்கள் பாரபட்சங்களுக்கு எதிராக எழுந்து நின்று எதிர்வரும் இரண்டாம் திகதி தமிழீழ மாணவர் எழுச்சி நாளில் "நசிநது இனிக்கிடக்க மாட்டோம்" நாம் எல்லாம் நிமிர்ந்து நிற்போம்" என்று அணி திரண்டு எங்கள் உரிமைகளை வென்றெடுக்க அறைகூவல் விடுக்கின்றோம் எனச்சர்வதேச மாணவர் பேரவை தெரிவித்துள்ளது.

## விதை வெங்காயத்தை தொற்றுநீக்கி நடுக

(யாழ்ப்பாணம்)

வெங்காயப் பயிர்ச்செய்கைகளை மேற்கொள்ளும் யாழ்.குடாநாட்டு விவசாயிகள் தொற்று நீக்கப்பட்ட விதை வெங்காயங்களையே பயன்படுத்துமாறு யாழ்.மாவட்ட விவசாயத்திணைக்களத்தின் விவசாய உத்தியோகத்தர் சிறிபாலசுந்தரம் தெரிவித்துள்ளார்.

யாழ்.குடாநாட்டில் வெங்காயப் பயிர்களுக்கு "குமிழ் அழுகல்" என்ற நோயின் தாக்கம் அதிகரித்து வருகின்றது. இதற்கு விதைவெங்காயத்தில் இருக்கும் நுண் அங்கிகளின் தாக்கமே காரணம் எனக் கண்டறியப்பட்டது.

இக் குமிழ் அழுகல் நோய்த்தாக்கத்தினால் யாழ்.குடாநாட்டு விவசாயிகள் எதிர்கொள்ளும் நட்டங்களைச் சுட்டிக்காட்டியே விதை வெங்காயத்தைத் தொற்று நீக்கிய பின் நடுகை செய்யுமாறு விவசாய உத்தியோகத்தர் அறிவுறுத்தல் விடுத்துள்ளார். (33)

## தமிழ் மாணவர்கள் தவறான பாதையில் வழி நடத்தப்படாதிருப்பதை உறுதி செய்க

### -தமிழீழ மாணவர் அமைப்புப் பொறுப்பாளர்

(யாழ்ப்பாணம்)

இலங்கை அரசு திட்டமிட்டவகையிலும், தவறாகவும் பௌத்த பேரினவாதத்தை நியாயப்படுத்த ஏதுவாகவும் திரிவுபடுத்தப்பட்ட வரலாற்று நூல்களை மாணவர்களிடையே பாடத்திட்டங்கள் மூலம் அமுல்படுத்தி வருகின்றது அத்துடன் வேறு மொழிகளில் இருந்து திரிபுபடுத்தப்பட்ட மொழிபெயர்ப்புக்களை நூல்களில் உள்ளடக்கம் செய்து வருகின்றது. இவ்வாறன சூழலில் தமிழ் மாணவ சமூகம் தவறானதோர் பாதையில் வழிநடத்தப்படாமலிருப்பதை உறுப்படுத்த கல்வியியலாளர்கள் முன்வர வேண்டுமென தமிழீழ மாணவர் அமைப்பின் பொறுப்பாளர் சீ.நளன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தமிழீழ மாணவர் எழுச்சி தினத்தினை முன்னிட்டு குடாநாட்டு பாடசாலை மாணவர்களிடையே நடாத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டியோருக்கான பரிசளிப்புவிழா யாழ்.பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இதில்கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்; தமிழீழ மக்களினது விடுதலைப்போராட்டத்தில் முக்கிய திருப்புமுனையினை ஏற்படுத்தியது மாணவர் போராட்டமே. முதல்போராளியாக எதிரியிடம் உயிருடன் பிடிபடக்கூடாதென்ற கொள்கையுடன் சாவைத் தழுவிக்கொண்டவர் பொன்.சிவகுமாரன். அவர் சாவைத் தழுவிக் கொண்ட நாளையே மாணவர் எழுச்சி நாளாக அனுஷ்டித்தும் வருகின்றோம் எனத்தெரிவித்தார்.

இப்பரிசளிப்பு விழாவில் யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ், யாழ்.மாவட்ட கல்விப் பேரவையின் தலைவியும், முன்னாள் கல்விப் பணிப்பாளருமான செல்வி.தி.பெரியதம்பி உள்ளிட்ட பலரும் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். (27)

## 10 வருடமாக மின்சார நிலையவீதி முடக்கம்; படையினரிடமிருந்து விடுவிக்க செயலணிக்குழு

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரில் இராணுவத்தால் அதியுயர் பாதுகாப்பு வலயமாக முடக்கி வைக்கப்பட்டிருக்கும் மின்சார நிலைய வீதியினை இராணுவத்தினரிடமிருந்து விடுவிப்பதற்காக செயற்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

யாழ்.நகர அபிவிருத்திக்குழுவின் பிரதிநிதிகள் ஐந்து பேரை உள்ளடக்கியதாக இச் செயற்குழு நியமிக்கப்பட்டுள்ளது.

யாழ். நகரிலுள்ள பிரதான வீதிகளில் ஒன்றான இம்மின்சார நிலைய வீதி 1995 ஆம் ஆண்டில் இருந்து இராணுவ அதி உயர் பாதுகாப்பு வலயமாக முடக்கி வைக்கப்பட்டிருப்பதால் யாழ். நகரில் பெரும் போக்குவரத்து நெருக்கடிகள் தோன்றியுள்ளன.

இந்நிலைமையைக் கவனத்தில் கொண்டு மேற்படி வீதியை மக்கள் பாவனைக்கு திறந்து விடுமாறு தொடர்ச்சியாகக் கோரப்பட்டு வருகின்ற போதும், இதற்கு எந்த விதமான சாதகமான பதில்களையும்படைதரப்பு வழங்கவில்லை.

இந்நிலையில் மேற்படி வீதியின் விடுவிப்பு சம்பந்தமான நடவடிக்கைகளை முன்னெடுக்கவென விசேட செயற்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்படுகிறது. (33)

## நாவாந்துறை றோ.க.வித்தியாலயத்தில் பற்றாக்குறை; அபிவிருத்தி மேற்கொள்ள நடவடிக்கை

(நாவாந்துறை)

யாழ்.நாவாந்துறை றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை அடிப்படை வசதிகளற்ற நிலையில் இயங்கிவருகிறது.

குறிப்பாக இப்பாடசாலையில் கட்டடப்பற்றாக்குறை, இடவசதிகள்இன்மை, ஆசிரியர்கள் பற்றாக்குறை, சுகாதார வசதிகள் பற்றாக்குறை போன்ற குறைபாடுகள் இருந்து வருகின்றன.

இந் நிலைமைகளைக் கவனத்திற் கொண்டு இப்பாடசாலையை விருத்தி செய்ய தமிழீழக்கல்வி மேம்பாட்டுப் பேரவை, யாழ். வலயக்கல்வித்திணைக்களம் என்பன முன்வந்துள்ள போதும் இப்பாடசாலைக்குரிய காணியன் அளவு சுமார் 2 1/2 பரப்பு மட்டுமே காணப்படுவதால் அதனை விஸ்தரிப்புச் செய்வதில் முட்டுக்கட்டைகள் ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கும் நாவாந்துறை தேவாலயத்தின் பங்குத்தந்தை அருட்திரு கருணாரட்ணம் அடிகளார் இப்பாடசாலையை விருத்திசெய்வதற்கு ஏற்ற விசாலமான காணிஒன்றைப் பெற்றுததருமாறு யாழ்.அரசாங்க அதிபர் கே.கணேஷிடம் நேரில் கோரிக்கையும் விடுத்துள்ளார். (33)

## யாழில் பிரதான எட்டு வடிகால்களை புனரமைக்க நடவடிக்கை—க.குணராஜா

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரத்தில் இருக்கும் எட்டு பிரதான வடிகால்கள் நொராட்திட்டத்தின் கீழ் புனரமைக்கப்படவுள்ளதாக யாழ்.மாநகர ஆணையாளர் கலாநிதி க.குணராஜா தெரிவித்துள்ளார்.

யாழ்.நகரில் இருக்கின்ற மிகப்பழமையானதும், பிரதானமான இவ்வடிகால்கள் உடனடியாகப் புனரமைக்கப்படவேண்டிய தேவைப்பாடுகள் உள்ளன.

இவை நீண்டகாலமாகப் புனரமைப்புப் செய்யப்படாது இருப்பதனால் இவற்றின் கரையோரச் சுவர்களும், மதகுகளும், அத்திவாரக்கட்டுக்களும் சேதமடைந்துள்ளன. இதனால் யாழ்.நகரிலுள்ள இப்பிரதான கழிவுநீர் வடிகால்களில் கழிவுநீர் தேங்கிநின்று துர்நாற்றம் வீசுகிறது.

இது தொடர்பாகச்சுட்டிக்காட்டி விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கிணங்க இந்த வடிகால்களைப் புனரமைத்துத்தர நொராட் திட்டத்தின் கீழ் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாக மாநகரசபை ஆணையாளர் கலாநிதி க.குணராஜா மேலும் தெரிவித்துள்ளார். (33)

## ஆக்கபூர்வமான மரநடுகைத் திட்டம் இல்லை; யாழ்.குடாநாட்டில் சுற்றுச் சூழல் பாதிப்பு!

### -சமூக அவதானிகள் விசனம்

(யாழ்ப்பாணம்)

யாழ.குடாநாட்டிற்கென ஆக்கபூர்வமான மரநடுகைத் திட்டங்கள் எவையும் அமுல்படுத்தப்படாதிருப்பதனால் அங்கு சுற்றுச்சுழல் நிலைமைகள் மிக மோசமாகி வருவதாக சமூக அவதானிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

யாழ்.குடாநாடு விரைவாக நகரமயமாக்கலுக்குட்பட்டு வருவதால் நாளாந்தம் ஏராளமான மரங்கள் அனுமதி பெற்றும், சட்டவிரோதமான முறையிலும் தறிக்கப்பட்டு வருகின்றன. இதனால் யாழ்.குடாநாட்டின் வனவள விகிதாசாரம் மிகவும் குன்றிப் போயுள்ளது.

எனினும் இந்த யதார்த்தத்தை உணர்ந்து யாழ்.குடாநாட்டிலுள்ள எந்தவொரு சுற்றுச் சூழல் நலன்பேணும் அமைப்புக்களும் ஆக்கபூர்வமான மரநடுகைத் திட்டங்களை அமுல்படுத்தவில்லை. இதன் விளைவாக யாழ்.குடாநாட்டின் மழைவீழ்ச்சி சீரான ஒழுங்கில் காணப்படாதுள்ளதுடன் சூழல் வெப்பநிலையும் அதிகரித்துக் காணப்படுவதாகவும் மேலும் சுட்டிக்காட்டப்படுகிறது. (33)

# ஆளணி வளப் பற்றாக்குறையால் நெருக்கடியில் தவிக்கும் கிளி. மாவட்ட வைத்தியசாலை


**கிளிநொச்சி** மாவட்ட வைத்தியசாலையில் ஆளணிப் பற்றாக்குறை நிலவி வருவதன் காரணமாக தற்போது வைத்தியசாலையில் கடமை புரியும் மருத்துவர்கள். ஊழியர்கள் முதல் சிகிச்சை பெறச் செல்லும் நோயாளர் வரை பலத்த சிரமங்களை எதிர் கொள்ள வேண்டிய நிலைக்கு ஆளாகியுள்ளனர்.



மாவட்ட வைத்திய அதிகாரி சதானந்தன்

தற்போது கிளி. மாவட்ட வைத்தியசாலைக்கு சிகிச்சை பெறச் செல்லும் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ள நிலையில் போதிய வைத்திய அதிகாரிகள் இல்லாமையின் காரணமாக நோயாளர்கள் பல மணி நேரம் வரிசையில் காத்து நின்றே சிகிச்சை மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது அதே போன்று உயர் குருதி அழுத்தம், நீரிழிவு நோய்களுக்கான கிளினிக் சிகிச்சைக்கென வரும் நோயாளர்களும் சிகிச்சை பெறுவதிலும் மருந்தினைப் பெற்றுக் கொள்ளுவதிலும், பலத்த சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றமையினை அவதானிக்க முடிகின்றது.

மற்றும் வைத்தியசாலை நோயாளர் விடுதியில் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வரும் நோயாளர்களில் பெரும்பாலான நோயாளர்கள் கட்டில்கள் இல்லாத நிலையில் நிலத்தில் இருந்தே சிகிச்சை



பெற்று வருவதன் காரணமாக மேற்படி நோயாளர்கள் கிருமித் தொற்றுக்குள்ளாக வேண்டியதுடன் பலத்த அசௌகரியங்களுக்கும் உள்ளாகியுள்ளனர்.


மாவட்ட வைத்தியசாலையில் ஏற்பட்டுள்ள இந் நிலைமை குறித்து கிளி. மாவட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி இ.சதானந்தன் அவர்களுடன் தொடர்பு கொண்ட பொழுது தெரிவிக்கையில்;

உண்மையில் மாவட்ட வைத்தியசாலையில் ஆளணிப் பற்றாக்குறையென்பது பாரிய பிரச்சினையாக உள்ளதுடன் நோயாளர்கள் தங்கிச் சிகிச்சை பெறுவதற்கு போதிய இடவசதி இல்லாத நிலை உருவாகியுள்ளது கிளி.மாவட்ட வைத்தியசாலை யில் 40 வைத்தியர்களும், 70 இற்கும் மேற்பட்ட தாதியர்களும், 12 மருத்துவ மாதர்களும், நான்கு மருந்தாளர்களும், நான்கு மருந்துக் கலவையாளர்களும், 100 சிற்றூழியர்களும் கடமை புரிய வேண்டிய நிலையில் தற்போது ஏழு மருத்துவர்களும், மூன்று மருத்துவ நிபுணர்களும் 15 தாதியர்களும், மூன்று மருத்துவ மாதர்களும் 51 சிற்றூழியர்களுமே கடமை புரிந்து வருகின்றனர்.

மருந்தகத்திற்குத் தேவையான மருந்தாளர், மருந்துக் கலவையாளர், ஆய்வு கூட பரிசோதகர்கள் ஒருவரும் நியமிக்கப்பட வில்லை இப்படியான ஒரு சூழ்நிலையிலேயே பலத்த சிரமங்களுக்கு மத்தியில் சொற்ப ஆளணியினருடன் மாவட்ட மக்களுக்கு தன்னாலான சேவையினை இவ் வைத்தியசாலை நல்கி வருகின்றது. இந்நிலையில் 20 மருந்துவத் தொண்டர்களின் தன்னலமற்ற சேவை பாராட்டப்பட வேண்டும்.

மாவட்ட வைத்தியசாலையில் ஆண்கள் விடுதி, பெண்கள் விடுதி, பிரசவவிடுதி, சிறுவர் விடுதி, அவசர சிகிச்சை பிரிவு அதிதீவிர சிகிச்சைப் பிரிவு அத்துடன் சகல வகையான கிளினிக் சிகிச்சைப் பிரிவுகளும் நடைபெற்று வருகின்றன.

இந்த சொற்ப ஆளணியுடனேயே மேற்படி பகுதிகளுக்கான சேவையினை தற்போது நல்கி வருகின்றோம். வெளி நோயாளர் பிரிவில் சிகிச்சை பெற தினமும் 850 இற்கும் மேற்பட்ட நோயாளர்கள் வருகை தருகின்றனர். அத்துடன் ஆண், பெண் குழந்தை நோயாளர் விடுதிகளில் 200இற்கு மேற்பட்ட நோயாளர்கள் தங்கி



சிகிச்சை பெற்று வருகின்றனர்.

விடுதிகளில் நோயாளர்களின் பாவனைக்கென 100 கட்டில்கள் மட்டும் உள்ள நிலையில் தங்கி சிகிச்சை பெற்று வரும் நோயாளர்களில் அரைப்பங்கினர் நிலத்தில் இருந்து சிகிச்சை பெற வேண்டிய நிலைக்கு ஆளாகி வருகின்றனர். மற்றும் நோயாளர் விடுதிகளில் அமைக்கப்பட்டுள்ள மலசல கூடங்கள் என்பன நோயாளர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப போதுமானவை அல்ல. இதன் காரணமாகவும், விடுதிகளில் தங்கி சிகிச்சை பெறும் நோயாளர்கள் பெரும் சிரமத்தினை எதிர்கொண்டு வருகின்றனர்.

எமது வேண்டுகைக்கமைவாக வெளிநாட்டிலுள்ள எமது உறவுகளின் துணையுடன் கிளிநொச்சி மருத்துவ சங்கத்தினூடாக வைத்தியசாலையில் சிறுசிறு புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எமது மாவட்ட வைத்தியசாலை ஒரு ஆதார வைத்தியசாலை போன்று தற்போது இயங்கி வருகின்றது.

இன்று எமது மாவட்ட வைத்தியசாலையில் கடமை புரிந்து வரும் மருத்துவர்கள் எமது மாவட்டத்தில் கல்வி பயின்று மருத்துவப் பட்டம் பெற்றவர்கள் என்பது பெருமை தரும் விடயமாகும்.

இதே போன்று எமது மக்கள் நலன் கருதி மருத்துவப் பட்டம் பெற்ற அதிக எண்ணிக்கையான எம்உறவு மருத்துவர்கள் இங்கு வந்து கடமை புரிய முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொள்ள விரும்புகின்றேன்.

மற்றும் நோயாளர் விடுதிகளில் ஏற்பட்டுள்ள மலசலகூடக் குறைபாட்டினை நிவர்த்தி செய்யும் வகையில் அவற்றினை அமைத்துக் கொடுப்பதற்கு கருணை உள்ளத்தினர் மற்றும் தனவந்தர்களின் தயவினை வேண்டி நிற்கின்றோம்.

எமது வைத்தியசாலையில் பணிபுரியும் அனைவரினதும் ஒத்துழைப்புடன் பலத்த சிரமத்திற்கு மத்தியிலேயே இயன்றளவு சேவையினை நல்கி வருகின்றோம்.

இங்கு சிகிச்சை பெற்று வரும் நோயாளர்கள் இதனைக் கருத்திற் கொண்டு எமது நிர்வாகத்தினருக்கு தங்கள் ஒத்தாசையினை நல்கி வருகின்றனர்.இதன் காரணமாக

**கனகபுரச்சோதி**

வைத்தியசாலை நிர்வாகத்தினரால் இயன்றளவில் சேவை நல்கிட முடிகின்றது என்றார்.

எனவே கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் நிலவி வரும் ஆளணிப் பற்றாக்குறை. இட வசதி அற்ற நிலை மற்றும் வைத்தியசாலையில் உள்ள குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படும் பொழுது நோயாளர்கள் முதல் வைத்தியசாலை ஊழியர்கள் வரை எதிர் கொள்ளும் சிரமங்களுக்கு முற்றுப் புள்ளி வைக்க முடியும்.

இல்லாவிடத்து அனைவரும் எதிர் கொண்டுவரும் சிரமங்களைத் தவிர்ப்பதென்பது கடினமாகும்.

# பேரினவாதிகளின் அடாவடித்தனத்தைக் கண்டித்து கிளி. பி. தே. எழுச்சிப் பேரவை விடுக்கும் அறைகூவல்

(அலுவலகசெய்தியாளர்)

காலம் தாழ்த்தாது தமிழன் என்று கூறிக் கொள்ளும் ஒவ்வொரு குடி மகனும் பேரினவாதத்திற்கு எதிராகக் கிளர்ந்தெழுந்து எமது தமிழீழத் தாய கத்தை அமைக்க முன்வருமாறு கிளிநொச்சி பிரதேச தேசிய எழுச்சிப் பேரவை மக்களுக்கு அறைகூவல் விடுத்துள்ளது. இது குறித்து பேரவை அறிக்கை ஒன்றையும் வெளியிட்டுள்ளது. கடந்த சில வாரங்களாக தமிழர் தலைநகரான திருகோணமலையில் சிங்களப் பேரினவாதிகளாலும், காடையர்களாலும் முற்றிலும் சட்டத்திற்கு முரணான வகையில் நகரின் மத்தியில் இரவோடு இரவாக நிறுவப்பட்ட புத்தர் சிலையும் அதனைச் சிங்களக் காடையர்களைக் கொண்டும்,அரச பயங்கர வாதிகளைக் கொண்டும் பாதுகாக்கும் செயலானது தமிழ் மக்களையும் தமிழர்களின் தேசியத் தலைமையையும் கடும்சினம் ஊட்டி மீண்டும் போரிற்கு வலிந்து இழுப்பதாகவே நாம் கருதுகின்றோம்.


அத்துடன் இவ்வாறான செயல் கள் மூலம் எமது தலைநகரத்தில் சிங்களக் குடியேற்றங்களை நிறுவி எம்மை முகவரியற்ற மக்களாக மாற்ற ஜே.வி.பி. பேரினவாத காடை யர்களும், தம்மைப் புத்தரின் சீடர்களெனக் கூறிக் கொள்ளும் காவியுடையணிந்தவர்களும், முயற்சிப்பதை எம்மால் பரிபூரணமாக அறிய முடிகின்றது.

இப்போர் நிறுத்த உடன்படிக்கை அமுலிலுள்ள வேளையில் இவ்வாறான அத்துமீறும் சம்பவங்களும் எமது போராளிகள் மீதும், தமிழ் ஊடகவியலாளர்கள் மீதும், அப்பாவி மக்கள் மீதும் படுகொலைகள் நடப்பதை நாம் தொடர்ந்தும் பொறுமையாகப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது.

எனவே நாம் இச்செயற்பாடுகளை வன்மையாகக் கண்டிக்கும் அதேவேளை தமிழீழ தேசியத்தலைவரின் கொள்கை இலட்சியமாம் தமிழீழத்தாயகம் என்னும் கோட்பாட்டிற்கு செவி சாய்த்து தேசியத் தலைமையின் கீழ் அணிதிரண்டு எமக்கான தாயகத்தை அமைப்பதைத் தவிர எமக்கு வேறுவழி கிடையாது என்பதை சிங்களப்பேரினவாதம் தொடர்ந்தும் எமக்குத் தெளிவுபடுத்தி வருகின்றது.

எனவே நாம் காலம் தாழ்த்தாது தமிழன் என்று கூறிக்கொள்ளும் ஒவ்வொரு குடிமகனும் பேரினவாதத்திற்கு எதிராகக் கிளர்ந்து எழுந்து எமது தமிழீழத்தாயகத்தை அமைக்க முன் வருமாறு வேண்டுகின்றோம். இவ்வாறு கிளிநொச்சி பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையினர் அறைகூவல் விடுத்து வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சோ)

# 23.05.2005 - 29.05.2005




23.

☞ திருமலை மாவட்டத்திலுள்ள கரையோரக் கிராமங்களான கிறிஷாபுரி மற்றும் திருக்கடலூர் ஆகிய கிராமங்களில் தொடர்குண்டு வெடிப்புக்கள்

☞ கொழும்பு களுபோவில என்ற இடத்தில் மோட்டார் குண்டொன்று மீட்கப்பட்டது.

☞ நாட்டுப்பற்றாளர் சதா.தனபாலசிங்கம், எழுத்தாளர் செம்பியன் செல்வன் ஆகியோரது இறுதி அஞ்சலி நிகழ்வுகள் இடம் பெற்றன.

☞ வேலணை சைவப்பிரகாச வித்தியாலய மாணவன் சிவராசா ஜெனி நாரந்தனைப் பகுதியில் வைத்து சிங்களக் கடற்படையினரால் கைது.

☞ கண்டி தலதா மாளிகைத் தாக்குதலில் ஈடுபட்டதாகக் கூறப்பட்டு அதிகூடிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு வெலிக்கடைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்ட நபர் சிறைச்சாலையில் மரணம்.

☞ பருத்தித்துறை கல்லூரி வீதியில் உந்துருளி மோதியதில் மூன்று வயதுச் சிறுவன் சம்பவ இடத்திலேயே பரிதாபகரமாக உயிரிழந்தார்..

☞ பொலநறுவை மாவட்டம் மன்னம்பிட்டியில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக் கொலை

☞ போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் திருமலைக் கண்காணிப்பாளர்கள் கிழக்குப் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் மற்றும் திருகோணமலை சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் ஆகியோருடன் சர்ச்சைக்குரிய புத்தர் சிலை தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தினர்.

24.

☞ யாழ்.தென்மராட்சி பிரதேச மக்கள் தமது வாழ்விடங்களை ஆக்கிரமித்துள்ள இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றி அப்பகுதிகளில் தம்மை மீளக் குடியமர அனுமதிக்கக் கோரி தொடர் போராட்டங்களை நடத்தத் தீர்மானம்.

☞ திருமலையில் விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் போராளியொருவரும், அவரது உதவியாளரான பொதுமகன் ஒருவரும் சிறிலங்காப் படையினரால் கடுமையாக அச்சுறுத்தப்பட்டமை யைக் கண்டித்து போர் நிறுத்தக் கண் காணிப்புக்குழுவிடம் விடுதலைப்புலிகள் கண்டன அறிக்கையை சமர்ப்பித்தனர்.

25.

☞ திருகோணமலை புத்தர் சிலை எதிர்வரும் இரண்டாம் திகதி நள்ளிரவு 12.00 மணிவரைக்குள் அகற்ற அவகாசம் வழங்கி அதுவரை ஹர்த்தால் கதவடைப்பு எதிலும் ஈடுபடுவதில்லை என்று திருகோணமலையில் இடம்பெற்ற பொது அமைப்புக்களின் கூட்டத்தில் தீர்மானம்.

☞ திருகோணமலையில் இனக்கலவரத்தைத் தூண்ட முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இத்தகையை சம்பவங்களின் பின்னணியில் சிறிலங்காப் படையினரே உள்ளனர். இந்த நடவடிக்கை எல்லாப் பிரதேசங்களிலும் பரவக்கூடிய ஒரு ஆபத்தான நிலை உருவாகியுள்ளதென ஐரோப்பிய ஒன்றியத்தின் சிறிலங்காவுக்கான தூதுவர், நெதர்லாந்து தூதுவர் ஆகியோருக்கு அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் எடுத்துரைப்பு.



☞ திருகோணமலை முன்னாள் நகர சபைத் தலைவர் பெரியபோடி சூரியமூர்த்தி இனந்தெரியாதோரால் சுடப்பட்ட நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட பின் மரணம்.

☞ சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட போர் நடவடிக்கைகளினால் புலம்பெயர்ந்து தமிழ் நாட்டில் தஞ்சமடைந்திருக்கும் ஈழத்தமிழர்களை சிறிலங்கா மற்றும் இந்திய அரசுகளுடன் கலந்துரையாடி பாதுகாப்பான வழியில் தாயகம் திரும்ப உதவி செய்ய வேண்டும் என்று தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் ஐ.நா.சபையின் சிறிலங்காவிற்கான வதிவிடப்பிரதிநிதியிடம் வேண்டுகோள்.



☞ தவறுதலான வெடிவிபத்தின் போது தமிழீழ தேசிய துணைப்படை வீரர் ஒருவர் சாவடைந்தார்.

☞ மூதூர் கிழக்குப் பிரதேசத்தில் தமிழ்க் கிராமங்களுக்கு சீமெந்து, கட்டடப் பொருட்கள், விவசாயத்திற்கு தேவையான எரிபொருட்களை எடுத்துச் செல்ல கட்டை பறிச்சான் இராணுவத்தினர் தடை விதித்துள்ளதைக் கண்டித்தும் அதை உடன் நீக்கக் கோரியும் தமிழ் பொதுமக்கள் நாவலடியிலிருந்து கட்டை பறிச்சான் இராணுவ முகாம் வரை கண்டனப் பேரணியொன்றை நடத்தினர்.

☞ டக்ளஸ் தேவானந்தாவின் கொள்ளுப்பிட்டி அலுவலகமருகே சந்தேகத்திற்கிடமாக நடமாடியதாக தமிழ்ப் பெண் ஒருவர் பொலிசாரல் கைது.

☞ திருகோணமலையில் ஏற்பட்டுள்ள பதற்ற நிலை குறித்தும் அதைத் தணிப்பதற்கான வழிவகைகள் குறித்தும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற குழுத்தலைவர் இரா.சம்பந்தன் ஆராய்வு.

26.

☞ திருகோணமலை பௌத்த பிக்குகள் சங்க செயலாளர் திருகோணமலை மாவட்ட தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலனை மூதூரில் சந்தித்தார்.

☞ போலி அடையாள அட்டையுடன் வவுனியாவுக்கு செல்ல முற்பட்ட பெண் ஒருவரை ஓமந்தை சோதனைச் சாவடியில் வைத்து படையினர் கைது செய்து பின் விடுவிப்பு.

☞ மலேசிய முன்னாள் பிரதமர் மஹதிர் முஹமட் கொழும்பு வந்தடைந்தார்.

☞ ஜேர்மனியிலிருந்து இலங்கைத் தமிழர்களை திருப்பியனுப்புவதைக் கண்டித்தும் மாமனிதர் சிவராமிற்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வும் ஜேர்மனியின் பிறேமன் நகரில் இடம் பெற்றது.



27.

☞ பொதுக்கட்டமைப்பினூடாக சுனாமி அனர்த்த நிவாரணப்பணிகளை மேற்கொள்ளும் சிறிலங்கா சனாதிபதி சந்திரிகாவின் முயற்சிகள் வெற்றி பெற்றால் இலங்கையில் தற்போதைய போர் நிறுத்தம் தொடரும் எனவும், அது அரசியல் தீர்விற்கு வழி வகுக்குமெனவும் அமெரிக்காவின் முன்னாள் சனாதிபதியும் சுனாமி நிவாரணத்திற்கான ஐ.நா சிறப்புத்தூதுவருமான பில்கிளிங்டன் தமிழ் நாட்டில் செய்தியாளர்களிடம் தெரிவிப்பு.

☞ பொதுக்கட்டமைப்புக்கு எதிராக ஜாதிக ஹெல உறுமய கண்டியில் சத்தியாக்கிரகப் போராட்டத்தை நடத்தியது.

☞ யாழ்.உரும்பிராய் பகுதியில் இடம் பெற்ற கண்ணி வெடிவிபத்தில் "கலோட் ரெஸ்ட்" கண்ணி வெடிகள் அகற்றும் பிரிவைச் சேர்ந்த பணியாளர் ஒருவர் படுகாயம்.

☞ கடந்த 2000 ஆம் ஆண்டு பண்டாரவளை பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாமில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த 27 தமிழ் இளைஞர்கள் கொலை செய்யப்பட்ட வழக்கில் மரண தண்டனை பெற்றசிறிலங்காப் பொலிஸ் அதிகாரி உட்பட்ட நான்கு சிங்களவர்களும் உயர் நீதிமன்றத்தினால் விடுதலை.

☞ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் அத்துமீறிப்பிரவேசித்து சநதேகத்திற்கிடமான முறையில் நடமாடினார்கள் என்ற குற்றத்தின் பேரில் போராளிகளால் கைது செய்யப்பட்ட சிங்கள ஊர்காவற்படை வீரரொருவர் உட்பட மூவர் தமிழீழ நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

☞ யாழ்.வடமராட்சி நெல்லியடியில் அமைந்துள்ள பிள்ளையாரடி சிறிலங்கா படை காவல் நிலையம் மீது இனந்தெரியாதோர் குண்டுத் தாக்குதல் நடத்தியதாகக் கூறி அப்பகுதி மக்கள் மீது சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட கெடுபிடியை அடுத்து படையினருக்கும் மக்களுக்குமிடையே முறுகல் நிலை தோன்றியது.

☞ இலங்கை யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஹக்ருக் ஹொக்லண்ட் மட்டக்களப்பிற்கு விஜயம்.

☞ கொழும்பு கொட்டாஞ்சேனையில் இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் பலி.

☞ பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக சனாதிபதி மாளிகையில் சனாதிபதி சந்திரிகாவுக்கும் ஜே.வி.பி.பிக்குமிடையில் முக்கிய சந்திப்பு இடம் பெற்றது.

☞ கொழும்புத்துறை பாண்டியன் தாழ்வுப் பகுதியில் அமைந்திருந்த படையினரின் காவலரண் தீக்கிரை.

28.

☞ சுனாமி நிவாரணப் பணிகளையும் மீள் கட்டுமானப் பணிகளையும் மேற் கொள்ள பொதுக்கட்டமைப்பு நல்லதொருயோசனை எனவும் இதற்கு தனது முழு ஆதரவும் உண்டு எனவும் இலங்கை வந்த ஐக்கிய நாடுகள் சபையின் விசேட தூதுவரும், அமெரிக்க முன்னாள் சனாதிபதியுமான பில் கிளிங்டன் கல்முனை விஜயத்தின் போது ஊடகவியலாளரிடம் தெரிவிப்பு.

☞ தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கே.பி.ரெஜி ஐ.நாவின் விசேட பிரதிநிதியும் முன்னாள் அமெரிக்க சனாதிபதியுமான பில்கிளிங்டனை சிறிலங்காத் தலைநகாத் கொழும்பில் சந்தித்து கலந்துரையாடினார்.



☞ மட்டக்களப்பில் இனந்தெரியாதோரின் துப்பாக்கிச் சூட்டில் சிறிலங்கா பொலிஸ் சப்இன்ஸ் பெக்டர் ஒருவர் சம்பவ இடத்தில் பலி.

☞ போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் திருகோணமலை மாவட்ட தலைவருக்கும். தமிழீழ விடுதலைப்புலிகளுக்குமிடையில் சம்பூரில் பேச்சுவார்த்தையொன்று இடம் பெற்றது.

☞ இலங்கை தமிழரசுக் கட்சியின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களை தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் சந்தித்துக் கலந்துரையாடினார்.

☞ வடக்கு கிழக்கு சுகாதார அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடலொன்று கிளிநொச்சியிலுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் திட்டமிடல் செயலகத்தில் இடம் பெற்றது.

☞ யாழ்.கந்தர்மடம் சந்தியில் மின் ஒழுக்கு காரணமாக கடையொன்று முற்றாக எரிந்து நாசம்.

☞ கவிஞர் புதுவை இரத்தினதுரையின் "பூவரசம் வேலியும் புலுனிக் குஞ்சுகளும்" கவிதைத் தொகுப்பு அறிமுகவிழா யாழ்பல் கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம் பெற்றது.

மட்டக்களப்பு ஏறாவூரில் தனிப்பட்ட தகராறின் காரணமாக கிரனைட் வீசி தாக்குதல் நடத்தச் சென்ற முஸ்லிம் இளைஞர் கிரனைட் வெடித்ததில் பலி மேலும் மூவர் காயம்.

29.

☞ தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களை யுனிசெப் நிறுவனத்தின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி விடுதலைப்புலிகளின் சமாதான செயலகத்தில் சந்தித்துப் பேசினார்.

☞ ஊடகவியலாளர் சிவராமின் படுகொலையைக் கண்டித்து ஊடகவியலாளர்கள் கொழும்பில் பாராளுமன்ற சுற்றுவட்டாரத்திலிருந்து ஜப்பான் நட்புறவுப் பாலம் வரை அமைதி ஊர்வலம் ஒன்றினை நடத்தினர்.

☞ மட்டக்களப்பு மாவட்டத்தில் சோதனை நடவடிக்கைகள் தீவிரம்.

☞ "இருபதாம் நூற்றாண்டு உலக இலக்கியம்", "சமஷ்டியா தனிநாடா" ஆகிய இரு நூல்களின் 'அறிமுகவிழா கிளிநொச்சியில் இடம் பெற்றது.

☞ யாழ்.புங்கன்குளம் பகுதியில் மின்னல் தாக்கியதில் எட்டு வயதுச் சிறுவன் பரிதாபகரமாகஉயிரிழந்தார்.

☞ திருகோணமலை பெரியகுளத்தில் படகு கவிழ்ந்ததில் திருமலை புத்தர் சிலை விவகாரத்தில் ஆஜரான சட்டத்தரணியும் வங்கி அதிகாரியொருவரும் நீரில் மூழ்கி மரணம்.

# புத்தர்சிலையை அகற்றுமாறு நீதிமன்றம் உத்தரவிடவில்லை

-பௌத்த பிக்குமார் தெரிவிப்பு

திருகோணமலையில் அமைக்கப்பட்டுள்ள புத்தர் சிலையை அகற்றுமாறு நீதிமன்றம் உத்தரவிடவில்லை என பௌத்த பிக்குமார் தெரிவித்துள்ளனர். நேற்று முன்தினம் திருகோணமலையில் ஊடக மாநாடு ஒன்றை நடத்திய அவர்கள் இலங்கையில் ஆங்கில சட்டத்தின்படி புத்தர் சிலையை எந்த இடத்திலும் நிறுவலாம் அதற்கு அனுமதி பெறத்தேவையில்லை . ஏனைய மதங்களின் சிலைகளை நிறுவுவதற்கே அனுமதி பெறவேண்டுமென அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

எனவே சனாதிபதி இந்த விடயத்தில் திருகோணமலையில் உள்ள பௌத்த பிக்குகளை அழைத்து பேச்சு நடத்தி பிரச்சினைக்கு தீர்வுகாண வேண்டும் எனக்குறிப்பிட்டுள்ள பௌத்த பிக்குகள் இது ஒரு தேசிய பிரச்சினை என்றும் தெரிவித்தனர். திருகோணமலை வரலாற்றில் பௌத்தர்களுக்கு சிறப்பான இடம் இருந்து வந்துள்ளதாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

# சேதுசமுத்திரத்திட்டம் காரணமாக பூமி அதிர்வுகள் ஏற்பட வாய்ப்புண்டு

*ஜெயவர்த்தனபுர பல்கலை புவியியல்துறை பேராசிரியர்*

(கொழும்பு)

சேது சமுத்திரத்திட்டம் ஆரம்பிக்கப்படுமானால் மன்னார் தீவில் மட்டுமல்ல தமிழ் நாட்டிலும் பூமி அதிர்ச்சி போன்ற இயற்கை அழிவுகள் காலப்போக்கில் ஏற்படக்கூடிய வாய்ப்புக்கள் உள்ளன என ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக புவியியல்துறை பேராசிரியர் தெரிவித்துள்ளார்.


இலங்கை-இந்திய கடற்பரப்பில் பாக்குநீரிணையில் ஏற்படுத்தப்படவுள்ள சேதுசமுத்திர கால்வாய்த் திட்டத்தினால் ஏற்படக்கூடிய பாதிப்புக் குறித்து கொழும்பு மகாவலி நிலையத்தில் நேற்று முன்தினம் கருத்தரங்கொன்று நடைபெற்றுள்ளது.

இதில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இலங்கை பசுமை ஒன்றியம் மற்றும் இலங்கைத் தீவை பாதுகாக்கும் அமைப்பு ஆகியன ஏற்பாடு செய்த இந்தக் கருத்தரங்கில் இலங்கை புவியியல்துறையினர் சுற்றுப்புறச்சூழல் பேராசியர்கள், விரிவுரையாளர்கள், நிபுணர்கள், புத்திஜீவிகள் மற்றும் தொண்டர் அமைப்புக்கள் என்பன கலந்துகொண்டன.

இந்தச் சேது கால்வாய்த் திட்டத்தினால் மன்னார் தீவிற்கும் இந்தியாவில் குறிப்பாக தமிழ் நாட்டிற்கும் ஏற்படக் கூடிய புவியியல் ரீதியான பாதிப்புக்கள் குறித்தும் மற்றும் கடல்வாழ் உயிரினங்களுக்கு ஏற்படும் பாதிப்புக்கள் குறித்தும் ஆராயப்பட்டது.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 13 - 06 - 1936



உதிர்வு 02 - 05 - 2005

## நாட்டுப்பற்றாளர் கந்தையா — குலசேகரம்

(உரும்பிராய் — தெற்கு யாழ்ப்பாணம்)

மெழுகாக உமை உருக்கி எமை வளர்த்தீர்
விழுதாக நாம் உயர வழிசமைத்தீர்
அழுதாற முடியவில்லை உம்பிரிவுதனை ~எனினும்
மனதாரத் தொழுகின்றோம் உம திருவடியை

உங்கள் வழிசெல்லும்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
-உரும்பிராய்-

(சி.12027)

# தமிழீழ மாவட்ட நீதிமன்று-கிளிநொச்சி

வ/இல:289/05,
தன்மை: காணி

வழக்காளி,
இரத்தினம் பூமணி,
இல:-54, திருநகர்,
கிளிநொச்சி.

எதிர்

எதிராளி: பத்மநாதன் சத்தியபாமா,
இல:-96டி, திருநகர்,
கிளிநொச்சி.

## பகிரங்க அறிவித்தல்

மேற் குறித்த எதிராளிக்கு!

மேற்படி வழக்கில், உமக்கெதிராக வழக்காளியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கில் உமக்கு அழைப்புக்கட்டளையைச் சேர்ப்பிக்க முயன்ற பொழுதும், நீர் மேற்குறித்த முகவரியில் இல்லாமையால் இப்பகிரங்க அறிவித்தல் விடப்படுகின்றது. இப்பகிரங்க அறிவித்தல் வெளியாகி 15 நாட்களுக்கு இடையில் நீரோ, அல்லது உமது சார்பில் அக்கறை உடையவரோ, மன்றில் தோன்றி சட்டப்படியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும், தவறும் பட்சத்தில் உமக்கு எதிராக ஒரு முகவிளக்கம் நடாத்தி தொடர் சட்டநடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதனை இதனால் வெளிப்படுத்தி இப்பகிரங்க அறிவித்தல் விடப்படுகின்றது.

இந்த 2005ஆம் ஆண்டு, வைகாசி மாதம்... திகதி
"மன்றின் கட்டளைப்படி"

வரைவு:-
திரு.தா.இ.குலசங்கர்,
வழக்காளி சட்டவாளர்,
இரத்தினபுரம் வீதி,
கிளிநொச்சி.

செ.மாணிக்கராசா
பதிவாளர்,
தமிழீழ மாவட்ட நீதிமன்று,
கிளிநொச்சி.

(சி12163)

# அரசாங்க அறிவித்தல்

## தேருநர் பதிவேடுகள் திருத்தம்-2005

1980 ஆம் ஆண்டின் 44ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் 12(1) ஆம் பிரிவின்படி 2005ஆம் ஆண்டிற்குரிய யாழ்ப்பாணம் தேர்தல் தொகுதிக்கான தேருநர் பதிவேடுகள் திருத்தம் ஆரம்பமாகி விட்டதென்று இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

(2) தற்சமயம் நடைமுறையிலிருக்கும் 2004ஆம் ஆண்டு தேருநர் பதிவேடுகளின் பிரதிகள் அல்லது அவற்றின் பாகங்கள் பதியும் அலுவலரால் கீழ்க்காணும் அலுவலகங்களில் பார்வைக்கு வைக்கப்படும்.

| காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கும் இடம் | காட்சிக் கு வைக்கப்பட்டிருக்கும் தேருநர் இடாப்பும், அல்லது அவற்றின் பாகங்களும் |
|---|---|
| 01.மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம் | யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்திற்கான தேருநர் இடாப்புக்களின் பிரதிகள் அனைத்தும். |
| 02.பிரதேச செயலகம்/உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் | பிரதேச செயலகப் பிரிவு அடங்கிய பகுதியிலுள்ள வாக்காளர்களின் பெயர்கள் அடங்கிய தேருநர் இடாப்பின் பாகங்கள். |
| 03.மாநகர/நகர பிரதேச சபை அலுவலகங்கள் | ஒவ்வொரு மாநகர சபைகள், நகரசபைகள், பிரதேசசபைகள் அடங்கிய பகுதியினுள் வதியும் எல்லா வாக்காளர்களினதும் பெயர்கள் அடங்கிய தேருநர் இடாப்பின் பாகங்கள். |
| 04.ஒவ்வொரு கிராம அலுவலகர்களின் அலுவலகம் | ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிற்குள் வசிக்கும் எல்லா வாக்காளர்களினதும் பெயர்கள் அடங்கிய தேருநர் இடாப்பின் பாகங்கள். |
| 05.ஒவ்வொரு அஞ்சல் அலுவலகம் | ஒவ்வொரு அஞ்சல் அலுவலகம் அமைந்துள்ள பிரதேசத்தினுள் வசிக்கும் எல்லா வாக்காளர்களினதும் பெயர்கள் அடங்கிய தேருநர் இடாப்பின் பாகங்கள். |

(3) ஏதாவதொரு தேர்தல் மாவட்டத்தில் ஒரு வாக்காளராகப் பதிவதற்குத் தகுதியுள்ள ஒவ்வொருவரும் தமது பெயர் வாக்காளர் இடாப்பில் பதியப்பட்டிருக்கிறதா என்று மேலே குறிப்பிட்ட அலுவலகங்களில் பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள வாக்காளர் இடாப்புக்களைப் பார்வையிடுவதன் மூலம் நிச்சயப்படுத்திக்கொள்ளலாம்.

(4) வாக்காளர் இடாப்பை அல்லது அதன் பொருத்தமான பாகத்தைப் பரிசீலனை செய்து தமது பெயர் அவ்விடாப்பில் பதியப்படவில்லை எனக் காணும் ஒவ்வொருவரும் -2005ஆம் ஆண்டு யு,ன் மாதம் 01ஆம் திகதி 18 அல்லது அதற்கு மேற்பட்ட வயதினையுடைய ஒவ்வொருவரும் தத்தமது பகுதி கிராம அலுவலரிடம் 2005 யு,ன் மாதம் 01ஆம் திகதி முதல் 2005யு,ன் மாதம் 30ஆம் திகதி வரையும் இவற்றுக்கான விண்ணப்பப்படிவங்களைப் பெற்று ப,ரணப்படுத்தி அவற்றினை மீள கிராம அலுவலரிடம் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

தேர்தல்கள்
அலுவலகம்,
மாவட்ட செயலகம்,
யாழ்ப்பாணம்.

பொ.குகநாதன்,
உதவி தேர்தல்கள்
ஆணையாளர்,
உதவிப்பதியும் அலுவலர்,
தேர்தல் மாவட்டம் இல.10
யாழ்ப்பாணம்.

(சி12167)

# VDP, VADP அறிக்கைதயாரிப்பு பட்டறை நியாப்-II முல்லைத்தீவு மாவட்டம்

வைகாசிமாதம் முழுவதும் நடைபெற்ற PRA/PNA தயாரிப்புச் செயற்பாடுகளின் தொடர்ச்சியாக VDP/VADP தயாரிப்புக்கான பட்டறைகள் கீழ்வரும் அட்டவணைப்படி நியாப் மாவட்டத்திட்டப்பணிமனை, நீர்ப்பாசன வளாகம் ஒட்டுசுட்டானில் , காலை 8. 30 மணியிலிருந்து நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது. எனவே தயவுசெய்து சகல CST/TST குழு உறுப்பினர்களும், தமிழீழ விடுதலைப்புலிகளின் சகல அமைப்புக்களினது பிரதேச மட்ட பிரதிநிதிகளும் தங்களின் தனிப்பட்ட பிரசன்னத்தின் மூலம் இவ்வறிக்கைகளைத் தயாரித்து உங்கள் பிரதேசத்திற்குரியவற்றை பட்டறையின் இரண்டாம் நாள் இறுதியாக்கி சமர்ப்பிக்கும் வண்ணம் தயவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

01) மாந்தை கிழக்கு - 02,03/06/2005
02) துணுக்காய் - 06,07/06/2005
03) ஒட்டுசுட்டான் - 09,10/06/2005
04) புதுக்குடியிருப்பு - 13,14/06/2005
05) கரைதுறைப்பற்று - 16,17/06/2005.

இதற்காக தூர இடங்களில் இருந்து வருபவர்கட்கு 2,6,9,13,16 ஆகிய தினங்களில் தங்குவதற்கும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதால் தயவுசெய்து அதற்கான ஆயத்தத்துடன் வந்து இச்செயற்பாடுகளை துரிதமாக நிறைவேற்றித் தரும்வண்ணம் தயவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

எந்திரி ச.சு.சிவகுமார்,
பிரதித்திட்டப்பணிப்பாளர்,
நியாப் -முல்லைத்தீவு.

(சி-12021)

# இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் தீவிரவாதம் மிரட்டலாக உள்ளது

**-அத்வானி**

(புதுடில்லி)

இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் தீவிரவாதம் மிரட்டலாக இருக்கிறது. அதிலிருந்து இரு நாடுகளும் விடுபடவேண்டும் என்று பா.ஜ தலைவர் அத்வானி கூறியுள்ளார்.

பாகிஸ்தான் அதிபர் முஷாரப்பின் அழைப்பை ஏற்று பா.ஜ.தலைவர் அத்வானி நேற்று முன்தினம் தனது குடும்பத்துடன் பாகிஸ்தானுக்கு பயணமானார். கராச்சியில் தான் பிறந்த இடத்தை அத்வானி பார்வையிட




வுள்ளார். அதிபர்முஷாரப் உட்பட பாகிஸ்தான் தலைவர்களைச் சந்தித்து இவர் பேசவுள்ளார். பாகிஸ்தான் புறப்படும் முன் டில்லியில் பா.ஜ. தலைமை அலுவலகத்தில் கட்சித் தொண்டர்களிடையே அத்வானி பேசும் போது இவ்வாறு கூறினார்.

இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் இடையே நட்பு நிலவ வேண்டியது மிகவும் அவசியம். எனது பயணத்தின் போது பாகிஸ்தான் தலைவர்களிடம் இதை வலியுறுத்துவேன்.

இந்தியா பாகிஸ்தானிடையே தற்போது நடக்கும் அமைதி நடவடிக்கை தேசிய சனநாயக கூட்டணி அரசின்போது எடுக்கப்பட்டது. தற்போதைய மத்தியரசு அதைத் தொடர்கிறது. எனது பயணம் இந்த அமைதி நடவடிக்கைக்கு உதவி கரமாக இருக்கும்.

கடந்த ஆண்டு சனவரியில் இஸ்லாமாபாத்தில் வெளியிடப்பட்ட கூட்டறிக்கை இந்தியா-பாகிஸ்தான் உறவில் திருப்புமுனையை ஏற்படுத்தியது. இந்தியாவுக்கெதிரான தீவிரவாத நடவடிக்கைகளுக்கு எங்கள் பகுதியை பயன்படுத்த அனுமதிக்கமாட்டோம் என்று பாகிஸ்தான் அறிவித்த காரணத்தால் தான் அமைதி நடவடிக்கைகள் எடுக்க மத்தியரசு முடிவுசெய்தது.

அரசியல் ரீதியாக மட்டுமன்றி, தனிப்பட்டமுறையிலும் இது எனக்கு முக்கியமான பயணம். என் குடும்பத்தினரும் என்னுடன் வருகின்றனர். எனது பயணத்தின் போது இந்தியா-பாகிஸ்தான் உறவு மேம்பட வலியுறுத்துவேன். இந்தியாவில் இது தொடர்பாக ஒருமித்த கருத்து நிலவுகிறது.

இந்தியா-பாகிஸ்தான் உறவை மேம்படுத்த லாகூர் பஸ்சேவை, ஆக்ரா உச்சிமாநாடு என்பது உட்பட பல்வேறு முயற்சிகளை வாஜ்பாய் அரசு மேற்கொண்டது. சார்க் மாநாட்டில் பங்கேற்க இஸ்லாமாபாத்துக்கு அப்போதைய பிரதமர் வாஜ்பாய் சென்ற போது இருநாட்டு வெளியுறவு அமைச்சர்கள் மட்டத்தில் பேச்சுநடத்தும் முடிவெடுக்கப்பட்டது.

கடந்த 1978 ஆம் ஆண்டு மத்திய செய்தி மற்றும் ஒலிபரப்புத்துறை அமைச்சராக இருந்த போது நான் பிறந்த இடமான கராச்சிக்குச் சென்றேன். நான் படித்த பள்ளியையும், என் மூதாதையார் வீட்டையும் பார்த்தேன். அதன் பின் இப்போது தான் செல்லவுள்ளேன். இப்போது அந்த வீடு எப்படிப்பட்ட நிலையில் இருக்கின்றதென்று தெரியவில்லை. இவ்வாறு அத்வானி கூறினார்.



கேரள மாநிலம் மூணாறுக்கு சுற்றுலாப் பயணிகளின் வருகை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இங்கு வருபவர்களில் பலர் ஏரியில் சைக்கிள் படகில் பயணம் செய்ய ஆர்வங் காட்டி வருகின்றனர்.


## இலவச கணினி இலத்திரனியல் பயிற்சிக்காக நேர்முக தேர்வு

**பெண்கள் அபிவிருத்திபுனர்வாழ்வு நிறுவனத்தால் நடாத்தப்படவிருக்கும் இலவச கணினி பயிற்சி, இலத்திரனியல் பயிற்சி நெறிகளுக்கான நேர்முகத் தேர்வு 02.06.2005 அன்று காலை 9.30 மணிக்கு நடைபெறவிருப்பதால் விண்ணப்பித்தவர்கள் உரிய ஆவணங்களுடன் சமுகமளிக்கும் படி கேட்டுக் கொள்கின்றீர்கள்.**

இடம்:- பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனம்
பத்மா சந்தி,
9ஆம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு.

குறிப்பு:- இதுவரை விண்ணப்பிக்காதவர்களும் ஆவணங்களுடன் நேரில் சமுகமளிக்கவும், வயது எல்லை 18-25 வரையான பெண்கள் மட்டும்.

தகவல்:- *பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனம்,*
*மாவட்டச் செயலகம்,*
*புதுக்குடியிருப்பு.*

(6161)


## இரண்டாம் கட்ட தலைவர்களுக்கு பா.ஜ. கவில் பஞ்சமில்லையாம்

(புதுடில்லி)

பாரதீய ஜனதா கட்சியில் இரண்டாம் கட்ட தலைவர்களுக்கு பஞ்சம் இல்லை என்று முன்னாள் பிரதமர் வாஜ்பாய் கூறியுள்ளார்.

கோடை விடுமுறைக்காக மலைப் பிரதேசமான மணாலி சென்றுள்ள முன்னாள் பிரதமர் வாஜ்பாய் அங்கு ஓய்வெடுத்து வருகிறார். பா.ஜ மூத்த தலைவர்கள் மற்றும் பா.ஜ. தலைவர் அத்வானி ஆகியோர் இளையவர்களுக்கு இடம்கொடுத்து விட்டு ஒதுங்க வேண்டும் என்று ஆர்.எஸ்.எஸ் தலைவர்கள் கருத்து தெரிவித்த விவகாரம் குறித்து அவரிடம் நிருபர்கள் கேட்போது வாஜ்பாய் இவ்வாறு கூறியுள்ளார்.

பா.ஜ.வில் இரண்டாம் கட்ட தலைவர்களுக்கு எந்தப் பஞ்சமும் இல்லை. பலர்கட்சியில் தங்கள் திறமையைவெளிப்படுத்தி முன்னேறி வருகின்றனர். அவர்களிடையே எந்தப் போட்டியும், பொறாமையும் இல்லை. என்று கூறினார்.

## இலஞ்சம் போதாது; அமெரிக்கருக்கு தர்ம அடி

(ஆக்ரா)

தாஜ்மகாலை கண்காணிப்புக் கோபுரத்தில் இருந்து பார்த்து படம் பிடிக்க வழங்கப்பட்ட இலஞ்சம் போதவில்லை என்று அமெரிக்கர் ஒருவருக்குப் படைவீரர் ஒருவர் தர்ம அடிகொடுத்துள்ளார். அங்குள்ள சுற்றுலாப்பயணிகள் படையினரின் தாக்குதலிலிருந்து அவரை மீட்டனர். அமெரிக்கர் கொடுத்த புகாரின் பேரில் பாதுகாப்பு வீரர் பணி நிறுத்தம் செய்யப்பட்டுள்ளார்.

உத்தரப்பிரதேச மாநிலம் ஆக்ராவிலுள்ள 17 ஆம் நூற்றாண்டு நினைவுச்சின்னம் தாஜ்மகால். அதன் அழகைப் பார்க்க பல நாடுகளில் இருந்து சுற்றுலாப்பயணிகள் வருகின்றனர். கடந்த ஞாயிறன்று தாஜ்மகாலுக்கு ஒரு அமெரிக்கத் தம்பதிகள் வந்தனர். அவர்கள் எல்லா இடங்களையும் சுற்றிப் பார்த்து உயரமான இடத்தில் இருந்து படம் எடுத்தால் நன்றாக இருக்கும் என்று நினைத்தனர். படம் பிடிக்க படைவீரிடம் அனுமதி கேட்டு20 ரூபா இலஞ்சம் கொடுத்துள்ளனர். இது போதாது நூறு ரூபா தரவேண்டும் என்று கேட்டே அவர் இவர்களைத் தாக்கியுள்ளார்.



*சென்னையில் அடிப்படை வசதி கோரி தமிழக முதல்வரிடம் மனுக்கொடுக்கச் சென்றவர்களை தடுத்து நிறுத்தி பொலிசார் நடத்திய கொடூரத்தாக்குதலில் மயக்கமடைந்த பெண்ணொருவரை மருத்துவமனைக்குத் தூக்கிச்செல்லும் காட்சி.*

## கராச்சியில் மசூதி மீது தற்கொலை தாக்கு; நான்கு பேர் பலி; பலர் படுகாயம்

(கராச்சி)

பாகிஸ்தானின் கராச்சி நகரில் உள்ள மசூதி மீது தற்கொலைப் படையினர் நடத்திய வெடிகுண்டுத் தாக்குதலில் நான்கு பேர் பலியாகினர். பலர் படுகாயமடைந்தனர்.

கராச்சி நகரின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள மசூதி ஒன்றில் நேற்று முன்தினம் மாலை தொழுகை நடந்து கொண்டிருந்த போது மர்ம நபர்கள் மூன்று பேர் வந்தனர். அவர்கள் மசூதிக்கு வெளியே காவலில் ஈடுபட்டிருந்த பொலிசாரை சுட்டுக்கொன்றனர். இதைப் பார்த்த மற்றொரு பொலிசார் மர்ம நபர்களை நோக்கித் துப்பாக்கியால் சுட்டார். இதில் மர்ம நபர்களில் இரண்டு பேர் பலியாகினர்.

ஆனாலும் மற்றொரு நபர் மசூதிக்குள் நுழைந்து தான் கொண்டு வந்திருந்த வெடிகுண்டை வெடிக்கச் செய்து உயிரிழந்தார். இந்தச் சம்பவத்தால் கராச்சி நகரில் பதற்றம் ஏற்பட்டது. தற்கொலைப் படைத் தாக்குதல் நடத்த வந்தவர்கள் யார் என்பது குறித்து பொலிசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

## சென்னையில் தீ விபத்து; 200 குடிசைகள் நாசம்; இரண்டு பேர் பலி



(சென்னை)

சென்னையில் நேற்று முன்தினம் ஏற்பட்ட தீவிபத்தில் 200 குடிசைகள் எரிந்து சாம்பராகியுள்ளன. இந்த விபத்தில் பெண் உட்பட இரண்டு பேர் உடல் கருகிப் பலியாகியுள்ளனர்.

சென்னை பெரம்பூர் பேரக்ஸ் வீதி பட்டாளத்தில் கழிவுநீர்அகற்றும் நிலையம் உள்ளது. இதன் பின்புறம் டோபிகானா குடிசைப் பகுதி உள்ளது

இங்குள்ள ஒரு குடிசை வீட்டில் திடீரென தீப்பிடித்து எரிந்ததுஅப்போது பலத்த காற்று வீசியதால் தீ ஏனைய குடிசைகளுக்கும் வேகமாக பரவியது. இதில் உடல்நலக் குறைவால் வீட்டினுள் படுத்து இருந்த பெண் ஒருவரும் முதியவர் ஒருவரும் பலியாகியுள்ளனர். தீவிபத்து நடந்தபோது இவர்களால் ஓட முடியாததால் தீயின் கோரப் பிடியில் சிக்கி பரிதாபகரமாக பலியாகினர்.


## பூநகரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் பகிரங்க ஏலவிற்பனை

**பின்வரும் வாகன உதிரிப்பாகங்கள் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.**

*காலம்:–* **04.06.2005 ஆம் திகதி காலை 10.30 மணி**

*இடம்:–* **பூநகரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், மொத்த விற்பனை நிலையம், வாடியடி, பூநகரி**

01. லேலண்ட் பாரவூர்தி பாவிக்கப்பட்ட கௌசிங் செற்-01
02. லேலண்ட் பாரவூர்தி பாவிக்கப்பட்ட பின் வில்லுத்தகட்டுச் செற்-02
03. இரு சில்லு உழவியந்திர அச்சு செற் -01 (ரயர், ரீயூப் உட்பட)
04. பாவித்த 90 அம்பியர் மின்கலம் -01
05. பாவித்த பாரவூர்தி ரயர், ரீயூப்
06. லேலண்ட் பாரவூர்தி பாவித்த றிம் -04

*இங்ஙனம்.*
*கூட்டுறவுச் சேவையிலுள்ள,*
*கா. கார்த்திகேசு,*
*தலைவர்,*
*பூநகரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்.*

(சி.12168)

# பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் வெற்றி தன்னம்பிக்கையைத் தந்துள்ளது —சந்தர்போல்



பிரிஸ்டவுன் வெற்றி இழந்த தன்னம்பிக்கையை மீட்டுத்தந்துள்ளதாக மேற்கிந்தியத்தீவின் தலைவர் சந்தர்போல் தெரிவித்துள்ளார்.

2004,ஜூனில் வங்க தேசத்திற்கு எதிராக வென்றபின் மேற்கிந்தியத்தீவு அணிக்குத் தோல்வி முகம்தான். இங்கிலாந்துக்கு எதிராக வரிசையாக நான்கு டெஸ்டில் தோற்றது. பின்னர் தென்னாபிரிக்காவிடம் 2-0 என்ற கணக்கில் தொடரை இழந்தது. அடுத்து எட்டு ஒரு நாள் போட்டிகளில் தொடர்ந்து தோல்வி (பாகிஸ்தானிடம் மூன்று ஒரு நாள் போட்டி உட்பட) அடைய மிகுந்த நெருக்கடியில் இருந்தது.

இது குறித்து அணித்தலைவர் சந்தர்போல் கூறுகையில், வெற்றிகரமாக உழைத்த வீரர்கள், உற்சாகப்படுத்திய ரசிகர்களுக்கு நன்றி.இரண்டாம் இன்னிங்சில் நான் 153 ஓட்டம் எடுத்தது, துல்லியமான எறிமூலம் யூனிஸ்கானை ஆட்டமிழக்கசெய்தது எல்லாம் திருப்தி அளித்தது. சமீபகாலமாக அணி தன்னம்பிக்கை இழந்து தவித்தது. இந்த வெற்றி புதிய தென்பைத் தந்துள்ளது. அடுத்த போட்டியிலும் வெல்ல முடியும் என்ற நம்பிக்கையைத்தந்துள்ளது, " என்றார்.

பாகிஸ்தான் பயிற்சியாளர் பொப் உல்மர் கூறுகையில்,"முதல் இன்னிங்சில் 144 ஓட்டங்களுக்கு சுருண்டது தான் தோல்விக்கு முக்கிய காரணம். அடுத்த போட்டிக்கு (வரும் ஜூன் 3) இன்சமாம் யுகானா திரும்புவதால் சாதிக்க அதிகவாய்ப்பு உள்ளது" என்றார்.

# மேற்கிந்தியத்தீவு அணியில் புதிய முகம்



நாளை மறுதினம் யமேக்காவில் நடைபெறவுள்ள பாகிஸ்தானுடனான இரண்டாவது டெஸ்ட்போட்டியில் பங்கேற்கும் அணியில் மேற்கிந்தியத்தீவுகள் அணியில் டினோபெஸ்ட் என்ற வேகப்பந்து வீச்சாளர் இணைத்துக்கொள்ளப்படவிருக்கிறார்.

இதனால் முதலாவது போட்டியில் பங்கேற்ற பிடல் எட்வர்ட்ஸ் நீக்கப் படுவார் மற்றும் வெயின் பிராவோ கணுக்காலில் காயம் ஏற்பட்டிருந்த போதும் அணியில் தக்க வைத்துக் கொள்ளப்பட்டுள்ளார். இறுதி11பேரை அறிவிக்கும் வரை அவர் சிகிச்சை பெற்றுவருவார்.இதேபோன்று 13பேர் கொண்ட அணியில் பிராட்ஷோவும் அடங்குவார்.




# பாகிஸ்தான் வீரர்களிடையே மோதல் யூனிஸ்கானின் பதவி பறிபோகும் நிலை?



இன்சமாம் அப்ரிடியுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டதற்காக யூனிஸ்கானின் துணை அணித்தலைவர் பதவி பறிபோகும்நிலை ஏற்பட்டுள்ளதுடன் இவரது ஒப்பந்தம் நீடிக்கப்படமாட்டாது எனக் கூறப்படுகிறது.

பிரிட்ஜ்டவுனில் மேற்கிந்தியத்தீவுக்கு எதிராக நடந்த முதல் டெஸ்ட் பாகிஸ்தான் அணியில் பெரும் புயலைக் கிளப்பியுள்ளது. இப்போட்டியில் துடுப்பாட்ட வரிசை குறித்து தற்காலிகத் தலைவர் யூனிஸ்கான் மற்றும் அப்ரிடி இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. இதில் தலையிட்ட இன்சமாம், அப்ரிடிக்கு ஆதரவு தெரிவிக்க பிரச்சினை பெரிதாகியுள்ளது.

இது தொடர்பாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அதிகாரி சலீம் அல்டாப் ஜங் பத்திரிகையில் கூறியிருப்பதாவது,

வாக்குவாதம் நடந்தது உண்மைதான். இப்பிரச்சினை பற்றி விரிவான விசாரணைக்கு உத்தரவிடப்படும். அப்ரிடியும் யூனிஸ்கானும் நல்ல நண்பர்கள். இவர் களுக்கு இடையே தொடக்க நிலை பற்றிச் சிறிய அளவிலான வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. இருவரிடமும் விரிவாக விசாரணை நடத்தவுள்ளோன். தவறு செய்தவர்கள் நிச்சயமாகத் தண்டிக் கப்படுவார்கள். எனது புத்தகத்தில் யாருக்கும் மன்னிப்புக் கிடையாது. இவ்வாறு சலிம் அல்டாப் கூறியுள்ளார்.

பாகிஸ்தானில் இருந்து வெளிவரும் மற்றொரு பத்திகையான "தி.நியூஸ்" வேறு விதமாக செய்தி வெளியிட்டுள்ளது. யூனிஸ்கானை திடீரெனத் துணைத் தலைவராக நியமித்தது இன்சமாம் உட்பட அணியில் யாருக்குமே பிடிக்கவில்லை இதுதான் பிரச்சினைக்கு அடிப்படைக் காரணம் எனத தெரிவித்துள்ளது.

# இங்கிலாந்து அணியில் மாற்றமில்லை



வரும் வெள்ளியன்று இங்கிலாந்தின் ரிவர்சைட்டில் நடைபெறும் பங்களாதேஷ் அணியுடனான இரண்டாவது டெஸ்ட் போட்டியில்முதலாவது போட்டியில் பங்கேற்ற வீர்களே ஆடுவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இடுப்பில் காயம் காரணமாக அவதியுறும் அஸ்லி ஹைல்சுக்குப்பதிலாக சுழல்பந்துவீச்சாளர் கரத்பட்டி இடம்பெறுகிறார் எனினும், எதிர்வரும் அவுஸ்திரேலிய பங்களாதேஷ் அணிகளும் பங்குபற்றும் நட்வெஸ்ட் தொடருக்கான 14 பேர் கொண்ட அணியில் அஸ்லி ஹைல்ஸ் இடம் பிடிக்கிறார்.

அத்துடன் இங்கிலாந்து ஏ அணியில் பிரகாசிக்கும் ஜோன்லூயிஸ் அவுஸ்திரேலியாவுடனான தொடர் இரண்டிலும் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளார். இவர் நல்ல திறமையுள்ளவர் எனவும் எந்தச் சவாலையும், முறியடிப்பார் என்றும் தேர்வாளர் டேவிட் கிறவனி தெரிவித்துள்ளார். எனினும் ஜூன் 16ஆம் திகதி ஆரம்பமாகும் முக்கோணத்தொடருக்கு முதல் ஹைல்ஸ் தனது உடற்தகுதியை நிருபிக்கவேண்டியிருக்கும். அவர் தகுதி பெறாத பட்சத்தில் கரத்பட்டி தொடர்ந்து அணியில் நீடிப்பார். வாபார் தற்போது காயத்துக்குள்ளாகியுள்ள நிலையில் சைமன் ஜோன்ஸ் ஒருநாள் போட்டிகளில் பங்கேற்கலாம் ஜோன்ஸ் பங்களாதேஷ் அணியுடனான முதலாவது டெஸ்டில் திறமையை வெளிப்படுத்தினார். மேலும் அனுபவ வீரர் கிரகம் தோப்டெஸ்ட் போட்டிகளுக்கு இணைத்துக்கொள்ளப்படுவார் தென்னாபிரிக்க அணியுடனான ஒருநாள் போட்டி அணியில் இயன்பெல் பங்கேற்றபோதும் அவர் சிறப்பாகச் செயற்படவில்லை. இதனால் நட்வெஸ்ட் தொடரில் பங்கேற்பது சந்தேகமே.

# அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணிக்கு ஐ.சி.சி.5 இலட்சம் அமெரிக்க டொலர்





உலகத் தரவரிசையில் தொடர்ந்தும் முதலாவது இடத்தைப் பிடித்துள்ள அவுஸ்திரேலிய கிரிகெட் அணிக்குசர்வதேச கிரிக்கெட் சபை ஐந்து இலட்சம் அமெரிக்க டொலரை பரிசாக வழங்கியுள்ளது. இவ்வாறான பரிசு அறிமுகப்படுத்தியிருப்பது இதுவே முதல் தடவையாகும்.

தற்போது டெஸ்ட் தரவரிசையில் இரண்டாமிடத்தைப்பிடித்துள்ள இங்கிலாந்து வரும் ஆஷஸ் தொடரில் அவுஸ்திரேலியாவை வென்றால் முதலாமிடத்தை எட்டிவிடலாம். சர்வதேச ஒருநாள் போட்டி தரவரிசையில் இங்கிலாந்து ஆறாம் இடத்திலிருக்கிறது.

டெஸ்ட் சம்பியன் தரப்படுத்தல் கடந்த மாதம்2001ஆம் ஆண்டு அறிமுகப் படுத்தப்பட்டு 2002ஆம் ஆண்டு நடைமுறைக்கு வந்தமை குறிப்பிடத்தக்கது.

# பிரெஞ் ஓபன் டென்னிஸ் காலிறுதியில் ஷரபோவா



பிரெஞ் ஓபன் டென்னிஸ் தொடரில் மரியாஷரபோவா காலிறுதிக்குத் தகுதி பெற்றுள்ளார். முன்னாள் முதல்நிலை வீராங்கனையான ஜஸ்டின் ஹெனின், ஸ்வெட்லானா கஸ்னட் சோவாவைப் போராடி வென்றார்.

பிரெஞ் ஓபன் தொடரின் நான்காம் சுற்றுப் போட்டிகள் நேற்று முன்தினம் நடந்தன. பெண்கள் பிரிவில் பெல்ஜியத்தின்ஜஸ்டின்ஹெனின், ரஷ்யாவின் கஸ்னட் சோவாவை எதிர்த்து விளையாடி வெற்றி பெற்றார். தொடக்கத்தில் கஸ்னட்சோவா 5-3 என்ற முன்னிலை பெற்றார். ஆனாலும் அபாரமாக ஆடிய ஹெனின் வரிசையாக நான்கு செட்களையும் கைப் பற்றி அசத்தினார். ரஷ்யாவின் மரியா ஷரபோவா,ஸ்பெயினின் நூரியா லகோஸ்டிரா விவஸ் இடையிலான ஆட்டம் மழை காரணமாகக் கடந்த ஞாயிறன்று தடைப்பட்டது. அப்போது ஷரபோவா 6-2,3-3 என்ற முன்னிலையில் இருந்தார்.

நேற்று முன்தினம் தொடர்ந்த இப்போட்டியில் ஷரபோவா வெற்றி பெற வெறும் 10 நிமிடங்களே தேவைப்பட்டது. இவர்6-2,6-3 என்ற நேர் செட்களில் வெற்றி பெற்றார். விறுவிறுப்பான காலிறுதியில் இவர், ஹெனினைச் சந்திக்கிறார்.

# மாணவர் எழுச்சி நாளை முன்னிட்டு மரதன் ஓட்ட போட்டி முடிவுகள்

தமிழீழ மாணவர் எழுச்சி நாளை முன்னிட்டு தமிழீழ விளையாட்டுத் துறையினரும், மாணவர் அமைப்பின் விளையாட்டுப் பிரிவு கிளி. வலயக் கல்விப் பணிமனையினரும் இணைந்துபாட சாலை மட்டத்தில் இருபாலாருக்குமான மரதன் ஓட்டப்போட்டி நேற்று நடைபெற்றது.

மேற்படி மரதன் ஓட்டப்போட்டிகள் உடையார்கட்டு, விசுவமடு பகுதியிலிருந்து ஆரம்பமாகி பிரதான வீதி வழியாக கிளிநொச்சி பொது விளையாட்டு மைதான முன்றலினை வந்தடைந்தது.

ஆண்கள் பிரிவில் இ.கெங்காதரன் (அக்கராயன் மகா வித்தியாலய மாணவன்) இரண்டு மணி 19 நிமிடத்தில் ஓடி முடித்து முதலாமிடத்தினையும், இ.சிறீகரன், (திருவையாறு மகாவித்தியாலய மாணவன்) இரண்டாமிடத்தினையும், பொ.சுரேஸ்கண்ணா, (அக்கராயன் மகாவித்தியாலயம்) மூன்றாமிடத்தினையும், பெண்கள் பிரிவில் வி. டிவனியா நிலுசினி (கிளிநொச்சி மகாவித்தியாலய மாணவி) இரண்டு மணி நாலு நிமிடத்தில ஓடி முடித்து முதலாமிடத்தினையும், பா.பாலாம் பிகை (கிளி. பாரதி வித்தியாலய மாணவி) இராண்டாமிடத்தினையும், ம.விக்கினேஸ்வரி (கனகபுரம் மகாவித்தியாலய மாணவி மூன்றாம்மிடத்தினையும்) பெற்றுக் கொண்டனர். மேற்படி போட்டியில் அதிகளவிலான போட்டியாளர்கள் கலந்து கொண்டிருந்த போதும் வீதியில் ஏற்பட்ட போக்குவரத்து நெருக்கடிகளைச் சமாளிக்க முடியாது பெரும் சிரமங்களை போட்டியாளர்கள் எதிர் கொண்டிருந் தமையை அவதானிக்க முடிந்தது.

இன்று ஆண்களுக்கான சைக்கிள ஓட்டப்போட்டி நடைபெற வுள்ளது.

மேற்படி போட்டியானது இன்று காலை புதுக்குடியிருப்பு சந்தியிலிருந்து ஆரம்பமாகி கிளி.பொது விளையாட்டு மைதானத்தினை வந்தடையவுள்ள தென விளையாட்டு ஏறபாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (சோ.லோ.தீ)




உக்ரைன், கீவ் நகரில் நடந்த உக்ரைன் கோப்பை' கால்பந்து இறுதிப் போட்டியில், 1-0 என்ற கோல் கணக்கில் வென்று, கோப்பையைக் கைப்பற்றிய மகிழ்ச்சியில் டைனமோ கீவ் வீரர்கள்.






தமிழீழ மாணவர்எழுச்சி நாளை முன்னிட்டு நேற்று நடைபெற்ற மரதன் ஓட்டப்போட்டியில் ஆரம்பத்தையும் முதல் இரு இடங்களைப் பெற்ற வீர வீராங்கனைகளையும் படங்களில்காணலாம். (படங்கள்:-சோதி)

## சிந்தனைக்கு



சத்தியத்திற்காகச் சாகத்துணிந்து விட்டால் ஒரு சாதாரண மனிதப் பிறவியும் சரித்திரத்தைப் படைக்க முடியும்.

தமிழீழ தேசியத் தலைவர்.


# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

யாழ்.சாலை,கிளிநொச்சி. 01-06-2005

தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com


## சுபநேரத்திற்காகக் காத்திருப்பு!

யார் எதிர்த்தாலும் பொதுக்கட்டமைப்பை உருவாக்குவேன். பொதுக் கட்டமைப்பிற்கு உடன்படாதவர்கள் ஆட்சியை விட்டு வெளியேறலாம் என சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறுவது இன்று வழமையானதொன்றாகிவிட்டது. மறுவளத்தில் பொதுக்கட்டமைப்பில் சனாதிபதி கைச்சாத்திட்டால் ஆட்சியை விட்டு வெளியேறுவோம் ஆட்சியைக் கவிழ்க்கவும் தயங்க மாட்டோம் என்பதே ஆட்சியில் பங்கேற்கும் அரசாங்கத்திற்கு வெளியில் இருந்து ஆதரவு வழங்கும் பொதுக்கட்டமைப்பிற்கு எதிரானவர்களின் கூச்சல்.

ஆனால் சனாதிபதி சந்திரிகா பொதுக்கட்டமைப்பில் கைச்சாத்திடுவதாகவும் இல்லை. பொதுக்கட்டமைப்பிற்கு எதிர்ப்பானவர்கள் அரசாங்கத்திலிருந்து வெளியேறுவதாகவும் இல்லை. ஏதோ இரு தரப்பும் சுப நேரம் பார்த்துக்கொண்டு இருப்பது போன்று காலம் கடத்திக்கொண்டிருக்கின்றனர். பொதுக்கட்டமைப்பு விவகாரத்தில் தான் எந்தவித முன்னேற்றமும் ஏற்பட்டதாக இல்லை.

ஆனால், சுனாமி அனர்த்தத்தினால் மக்கள் பாதிப்பிற்குள்ளாகி ஐந்து மாதங்கள் கடந்து விட்டன. சர்வதேச நாடுகள் சுனாமி அனர்த்த மீள்கட்டமைபிற்கெனப் பெரும்தொகை நிதி வழங்கத்தயாராக உள்ளன. அத்தோடு விரைவில் அவை பொதுக்கட்டமைப்பை உருவாக்க வேண்டும் எனவும் தமது அபிப்பிராயத்தை வெளியிட்டும் வருகின்றன.

ஆனால் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அடிக்கடி பொதுக கட்டமைப்பை உருவாக்கியே தீருவேன் என்ற அறிவிப்புடன் நின்று விடுகிறார். அப்பேச்சுக்கள் கூட அரசாங்கத்தின் மீது பொதுக்கட்டமைப்புக் குறித்து அழுத்தங்கள் விழும் என எதிர்பார்க்கப்படும் சூழ்நிலையிலேயே எழுகின்றன.

இதேவேளை பொதுக்கட்டமைப்பிற்கு எதிரான சக்திகள் போடும் கூச்சல்கள் மறுபுறத்தில் அதிகரித்துச் செல்வதோடு, பொதுக்கட்டமைப்பு விவகாரத்தில் இருந்து கவனத்தைத் திசைதிரும்பும் வகையில்அவை தமது நடவடிக்கைகளையும் முனைப்புப்படுத்திக் கொண்டு செல்கின்றன. மேலும் அரசாங்கத்தின் மீதும், சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மீதும் அழுத்தத்தை அதிகரித்துச் செல்பவையாகவும் உள்ளன.

எடுத்துக்காட்டாக இன்று பொதுக்கட்டடமைப்பு விவகாரத்தை விட திருமலை புத்தர் சிலை விவகாரம் முதன்மைபெற்றதாகியுள்ளது. ஏனெனில் இது யுத்த நிறுத்தத்தையே கேள்விக்குள்ளாக்கும் வகையிலும் மக்களின் இயல்பு வாழ்க்கைக்குப் பெரும் சவால் விடுக்கப்படும் ஒன்றாகவும், மாறியுள்ளது. ஆனால் அரசாங்கம் அவ்விடயத்தில் கூட இதுவரை உறுதியான நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை.

அடுத்ததாக இதுவரை பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்படுமானால் அரசாங்கத்தில் இருந்து வெளியேறுவோம் எனத் தெரிவித்து வந்த ஜே.வி.பி தற்பொழுது புதியதொரு எச்சரிக்கையைவிடத் தொடங்கியுள்ளது. பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்பட்டால் சனாதிபதித் தேர்தலில் தனித்துப்போட்டியிடப் போவதாக விடுக்கப்படும் எச்சரிக்கையே அதுவாகும்.

அதேபோன்றே, அரசாங்கத்திற்கு வெளியில் இருந்து ஆதரவு அளித்துவரும் ஜாதிகஹெல உறுமய அமைப்பும் சனாதிபதித் தேர்தலில் தனித்துப்போட்டியிடப் போவதாக அறிவித்துள்ளது. அதாவது அரசாங்கத்திற்குப் புதிய மிரட்டல்களை ஜே.வி.பியும் ஜாதிகஹெல உறுமயவும் விடுக்கத் தொடங்கியுள்ளன.

அதாவது பொதுக்கட்டமைப்பின் அவசியத்தைமழுங்கடிக்கும் வகையில் அன்றி அதற்கும் அப்பாற்பட்டவகையிலான விவகாரங்களை முனைப்புப்படுத்துவதன் மூலம் பொதுக்கட்டமைப்பிற்கு எதிரான சக்திகள் அரசியல்சூழ்நிலையை மாற்றத்திற்கு உள்ளாக்கும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. அதில் அவை குறிப்பிடத்தக்க முன்னேற்றமும் கண்டு வருகின்றன.

ஆனால் ஆட்சியாளர்களோ செயற்பாட்டின் அடிப்படையில் இல்லாது பேச்சளவில் மட்டும் பொதுக்கட்டமைப்பைப் பற்றிப் பேசுகின்றனர். அதற்கு அப்பால் எத்தகைய செயற்பாட்டாலும், ஈடுபடுவதாக இல்லை. ஆனால் ஆட்சியாளர்களுக்குச் சார்பான ஊடகங்கள் மட்டும் ஆரூடங்கள் கூறுவது போல் பொதுக்கட்டமைப்பு இன்று வரும் நாளை வரும் என ஆரூடங்கள் தெரிவித்துக்கொண்டிருக்கின்றன.

இவை தமிழ்மக்களையும், சர்வதேசத்தையும் ஏமாற்றும் முயற்சியாகவே கொள்ளத்தக்கவையாகும். அவ்வாறு இல்லாதுவிடில் சனாதிபதி சந்திரிகா பொதுக்கட்டமைப்பை உருவாக்க எடுத்துக்கொண்ட காலம் போதுமானதாகும். இன்னமும் சுபவேளை பார்த்துக்கொண்டிருக்க வேண்டிய தேவை இல்லை. அவ்வாறு இல்லாது சனாதிபதி சந்திரிகா தொடர்ந்தும் காலம் கடத்துவாரேயானால் அவர் தனது பதவிக்காலம் வரைபொதுக்கட்டமைப்பு விவகாரத்தை இழுத்தடித்து விட்டுக் கைகழுவிட முற்படுகின்றார் என்பதே அர்த்தமாக இருக்கும்.

# மேல்கொத்மலைத் திட்டத்தால் பாதிக்கப்படுவோரை மின்சக்தி அமைச்சின் செயலர் ஏமாற்றினார்!

## மக்கள் இயக்கம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

மேல்கொத்மலைத்திட்டத்தால் பாதிக்கப்படவுள்ளவர்களுக்கு வீட்டு உறுதிப்பத்திரம் வழங்குவதாக மின்சக்தி அமைச்சின் செயலாளர், மற்றும் தலவாக்கலை நகர சபைத் தலைவர் மக்களை ஏமாற்றி உள்ளதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

கடந்த 28ஆம் திகதி தலவாக்கலையில் இடம்பெற்ற நிகழ்வின்போது, செயலாளர் உறுதிப் பத்திரங்கள் வழங்கவுள்ளதாகக் கூறப்பட்டபோதும், வீடுகளின் வரைபடங்களையே விநியோகித்துள்ளதாக மேல்கொத்மலைத்திட்டத்திற்கு எதிரான மக்கள் இயக்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

இதுதொடர்பாக அறிக்கை ஒன்றை விடுத்துள்ள அந்த அமைப்பின் தலைவர் தம்பையா, பாதிக்கப்படவுள்ளவர்களுக்கு மாற்றுக் காணிகள் ஒதுக்கப்படாமலேயே, வீட்டு உறுதிப் பத்திரங்கள் என்ற பேரில் வரைபடங்களை வழங்கிய செயலானது, ஒரு மோசடிச் சம்பவம் எனவும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இதேவேளை மேல்கொத்மலைத்திட்டம் எந்த எதிர்ப்புகள் வந்தாலும் நடைமுறைப்படுத்தப்படும் என மின்சக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

இது நடைமுறைப்படுத்தாவிட்டால் நாட்டில் மின்சாரக் கட்டணங்கள் இரண்டு மடங்காக அதிகரிக்கும் என அந்த அமைச்சு எச்சரித்துள்ளது.

மேல்கொத்மலைதிட்டம் ஆரம்பிக்கப்பட்டால் மலையகத் தமிழர்களின் இருப்புக்கு ஆபத்து ஏற்படும் என ஏற்கனவே அச்சம் வெளியிடப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# திருமலை புத்தர்சிலையை நீதிமன்ற தீர்ப்பின்படி அகற்ற எதிர்ப்பில்லை

## - பொல்யேங்கொட உபரத்தினதேரர் கருத்து

(கொழும்பு)

திருகோணமலையில் அமைக்கப்பட்டுள்ள புத்தர் சிலையை நீதிமன்றததீர்ப்பின்படி அகற்றுவதற்கு தாம் எதிர்ப்பில்லை என மகாதிவுல்ல இந்திரராம விகாராதிபதி பொல்யேங்கொட உபரத்தின தேரர் தெரிவித்துள்ளார். திருகோணமலை தமிழ்மக்கள் பேரவையின் தலைவர் வ.விக்னேஸ்வரனைச் சந்தித்த அவர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார். வன்முறையற்ற சர்வதேச சகவாழ்வு மையம் என்ற பிரேசில் நாட்டைச் சேர்ந்த அரசசார்பற்ற நிறுவனத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற கூட்டம் ஒன்றின்போதே இந்த உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளது. சமாதானத்திற்கு எதிரானவர்கள் இந்தப் புத்தர்சிலை அமைப்பு விடயத்தில் சம்பந்தப்பட்டுள்ளார்கள்.முட்டாள்தனமான இந்தச் செயல் காரணமாக மோசமான விளைவுகளை எதிர்நோக்க வேண்டியிருக்கும் எனத் தாம் இந்தச் சிலை வைத்தவர்களிடம் தெரிவித்துள்ளதாகவும் தேரர் குறிப்பிட்டுள்ளார்.

பெரும்பாலான பௌத்த பிக்குகள் இந்தச் சிலை அமைப்பு விடயம் தவறு என நினைப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (32)

# இலங்கையின் அரசியல் யாப்பில் உரிமைகள் சாசனம் இடம்பெறவேண்டும்

## - சட்டத்தரணி கருணாகரன் வலியுறுத்து

(கொழும்பு)

இலங்கை அரசியல் யாப்பின் ஒரு பகுதியாக உரிமைகள் சாசனம் இடம்பெற வேண்டும் என ஹட்டனில் நடைபெற்ற கருத்தரங்கில் சட்டத்தரணி கருணாகரன் வலியுறுத்தியுள்ளார்.ஹட்டன் சீடா நிறுவன மண்டபத்தில் சமூக நிலைமாற்ற நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட முழு நாள் கருத்தரங்கில் சட்டத்தரணி ஆர்.சி. கருணாகரன் உரிமைகள் சாசனம் நகல் திட்டத்தை சமர்ப்பித்துள்ளார். கூட்டாட்சி பரிமாணங்களும் இலங்கை சிறுபான்மையினரும் என்ற நூல் வெளியீட்டையொட்டி நடைபெற்ற ஒரு நாள் கருத்தரங்கில் சட்டத்தரணி இதனைச் சமர்ப்பித்தார்.

1948 ஆம் ஆண்டு ஐ.நா. மனித உரிமைகள் சாசனத்தைப் பிரகடனப்படுத்தியது. அதைத் தொடர்ந்து உரிமைகள் பற்றிய சிந்தனைகள் விரிவாக்கம் அடைந்ததால் பல்வேறு தீர்மானங்களையும், அறிக்கைகளையும், பிரகடனங்களையும் ஐ.நா. சபை வெளியிட்டுள்ளது. தனிமனித உரிமைகளிலே அதிக கவனம் செலுத்தி வந்த ஐ.நா. குழு உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டிய அவசியத்தை உணர்ந்து 1992 ஆம் ஆண்டில் சிறுபான்மையினர் உரிமைகள் பிரகடனத்தை வெளியிட்டது.

இலங்கை அரசியல் யாப்பிலே அடிப்படை உரிமைகள் பற்றிய ஒரு அத்தியாயம் இருந்தாலும் இது போதுமானதாக இல்லை. சர்வதேச ரீதியிலே நடைபெற்றுள்ள சிந்தனை மாற்றங்களை இது பிரதிபலிக்கவில்லை. முழுமையானதும், விரிவானதுமான உரிமைகள் சாசனம் பற்றிய கலந்துரையாடல்களும், விவாதங்களும் இன்றைய முக்கிய தேவைகளுள் ஒன்றாகும். இந்தப் பின்னணியில்தான் இந் நகல் திட்டம் சமர்ப்பிக்கப்படுகின்றது என்றும் கருணாகரன் கூறியுள்ளார். (32)

# இரண்டு கோடி ரூபா நஷ்டஈடுகோரி பா.உ. நியூமல் பெரேராவுக்கு குற்றப்பத்திரம்

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் நியூமல் பெரேராவிடம் இரண்டு கோடி ரூபா நஷ்ட ஈட்டினைக்கோரி பாராளுமன்ற உறுப்பினர் பாலித்த றங்கே பண்டாரவால் குற்றப்பத்திரம் அனுப்பப்பட்டுள்ளது. தனது சட்டத்தரணி மூலமாக அனுப்பிவைக்கப்பட்டுள்ள மனுவில் பாராளுமன்ற உறுப்பினர் நியாமல் பெரேரா தேசிய தொலைக்காட்சி சேவை ஒன்றில் வெளியிட்ட கருத்தின் காரணமாக தனதுநற்பெயருக்குக்களங்கம் ஏற்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டியுள்ளார். பாராளுமன்ற உறுப்பினர் பாலித்த றங்கேபண்டாரவின் நற்பெயருக்குக் களங்கம் ஏற்பட்டுள்ளதாகவும் அவரது புகழ், கௌரவம் போன்றவற்றைத் திட்டமிட்ட வகையில் அக்கௌரவத்திற்கு உள்ளாக்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பாலித்த றங்கேபண்டார மற்றும் நியாமல் பெரேரா ஆகிய இருவரும் ஐக்கியதேசியக் கட்சியின் புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களாவர் 2001ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலின்போது புத்தளம் மாவட்டத்தில் அதிகப்படியான விருப்பு வாக்குகளைப் பெற்று முதலிடத்தில் பாராளுமன்றிற்குத் தெரிவு செய்யப்பட்ட பாலித்த றங்கேபண்டார எதிர்கட்சியினால் கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறை நடவடிக்கைகளுக்கு முகம் கொடுத்து தம்மைப் பாதுகாத்ததாக பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர். கடந்த 15 ஆம் திகதி தேசிய தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகிய செய்தி அறிக்கையில் பாராளுமன்ற உறுப்பினர் நியாமல் பெரேரா பாராளுமன்ற உறுப்பினர் றஞ்கே பண்டார தொடர்பில் பொய்யான குற்றச்சாட்டுகளை முன்வைத்து புத்தளம் அக்போவ குளக்கட்டுக்கருகில் சட்ட விரோதக் கட்டடம் ஒன்றை அமைப்பதாகக் குற்றம் சாட்டியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த விடயம் தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியால் நடத்தப்பட்ட விசாரணையின் போது பாலித்த றங்கேபண்டாரவுக்கு எதிராக போலிக் குற்றச்சாட்டுச் சுமத்தப்பட்டதாகக் கூறப்பட்டது. அனுப்பப்பட்டு இருக்கும் குற்றப்பத்திரத்தின் 30 நாட்களுக்குள் இரண்டு கோடி ரூபா நஷ்டஈட்டைச் செலுத்தாவிட்டால் நீதிமன்ற நடவடிக்கைகள் எடுக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (32)

# இனமுறுகலுக்கு கூச்சல்போடும் அரசியல்வாதிகள் அநுராதபுரத்திற்கு அப்பால் செல்ல பலம் இல்லாதவர்கள்

## -நிதி அமைச்சர் சரத் அமுனுகம

யுத்தத்தைப்பற்றியும், சமூகங்களுக்கிடையே இன முறுகலை ஏற்படுத்தும் வகையிலும் கடந்த நாட்களாக மேடைகளிலும், பொதுக் கூட்டங்களிலும்,கூச்சல் போடும் அரசியல் வாதிகள், எவரும் அநுராதபுரத்திற்கப்பால் செல்லப் பலம் இல்லாதவர்களாக விளங்குகின்றனர் என நிதியமைச்சர் சரத்அமுனுகம தெரிவித்தார். கடந்த ஞாயிற்றுக்கிழமை கண்டி கலகெதரவில் இடம்பெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் உரையாற்றும்பொழுதே அவர் இந்தக் கருத்தை வெளியிட்டார். இவர்களில் பலர் திருகோண மலைக்குக் கூட செல்வதற்குத் தயக்கம் காட்டி வருகின்றனர். மேடைகளில் வீர முழக்கமிடும் இந்த அரசியல் வாதிகள் மக்களின் சுபீட்ச வாழ்விற்கோ அல்லது மக்களின் வேலையில்லாப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கோ எந்த விதமான ஆக்க பூர்வமான நடவடிக்கைகளையும் எடுப்பதில்லை.ஆகவே, எதிர்வரும் காலங்களில் தமது பிரதேசத்திலுள்ள இந்த முட்டாள்களை மக்கள் தேர்ந்தெடுத்து பாராளுமன்றத்திற்கு அனுப்புவதில்லை என திடசங்கற்பம் பூணவேண்டுமென அவர் கேட்டுக்கொண்டார்.

# கச்சாயில் கிணற்றினுள் எறிகணை வெடித்தது

## ஒருவர் பலி; சிறுமி உட்பட மூவர் படுகாயம்!

### - துப்புரவு செய்கையில் அனர்த்தம்

(வடமராட்சி)

தென்மராட்சியின் கரையோரக் கிராமமான கச்சாய்ப்பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவமொன்றில் சிக்கி இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

ஏற்கனவே அப்பகுதியிலிருந்த எறிகணையொன்று வெடித்ததை யடுத்தே இவ்வசம்பாவிதம் நிகழ்ந்துள் ளது. உயிரிழந்தவர் அதே பகுதியைச் சேர்ந்த கந்தசாமி காண்டீபன் (வயது 22) என அடையாளம் காணப்பட்டுள் ளார். அதே வேளை அப்பகுதியில் நின்ற அவரது சக நண்பர்களான அப்பாத்துரை பார்த்தீபன்(வயது21) மற் றும் எஸ்.சாயிர் (வயது-20)ஆகியோரு டன் குணசேகரம் ரஜிதா (வயது 7) எனும் சிறுமியும் படுகாயமடைந்துள்ள னர்.காயமடைந்தவர்கள் முதலில் சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலை யில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

உயிரிழந்த கந்தசாமி காண்டீ பனின் உடல் யாழ். போதனா வைத் தியசாலையில் பிரேத அறையினுள் வைக்கப்பட்டுள்ளது. கடந்த காலங் களில் இடம்பெற்ற இராணுவ நடவடிக் கைகளின்போது ஏவப்பட்ட எறி கணையொன்று கிணற்றினுள் வீழ்ந் திருந்ததாகவும், கிணற்றினை நேற்று மாலை ஆறு மணியளவில் இறைத் துத் துப்புரவு செய்ய முற்பட்டவேளை யிலேயே அது வெடித்ததாகக் கூறப் படுகின்றது. (27)

# கைதடி புதிய பாலத்தில் எட்டு உந்துருளிகள் விபத்து

### -அவதானத்துடன் பயணிக்கக்கோரல்

(தென்மராட்சி)

கைதடியில் புதிதாகக் கட்டப்பட்ட பாலத்தில் நேற்றுமுன்தினம் இரவு எட்டு மணியில் இருந்து பத்து மணிக் குள் எட்டு உந்துருளிகள் இரும்புப் பாலத்தில் அடுக்கடுக்காக வழுக்கி விழுந்து விபத்துக்குள்ளானதாக தெரியவருகிறது.

மழை தூறிக்கொண்டிருந்த வேளையில் இப்பாலத்தின் மீது வேக மாக உந்துருளியில் சென்றோரே விபத்துக்குள்ளாகி உள்ளனர்.புதிய இரும்புப்பாதை வழுக்கும் தன்மை கொண்டுள்ளதால் பயணிகள் உந்து ருளிகளை கவனமாகச் செலுத்தும் படியும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மற்றும் கைதடி எரிபொருள் நிரப்பு நிலையத்திற்குஅருகில் கலை நிகழ்வு ஒன்றிற்குச் சென்றுவிட்டுதிரும பிக் கொண்டிருந்த பேருந்தும், பார வூர்தி ஒன்றும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் நான்கு பேர் படுகாயமடைந்துள்ளனர். (28)

# மக்கள் மத்தியில் விழிப்புணர்வூட்ட யாழ். தேசிய எழுச்சிப் பேரவை முடிவு

(நல்லூர்)

யாழ்.குடாநாட்டில் பரவிவரும் பாத்தீனியத்தை விரைவாக அழிப்பதுடன் இது சம்பந்தமான விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்துவதெனவும் யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை சுற்றுப்புறச் சூழல் குழுவினர் தீர் மானித்துள்ளனர்.

யாழ்.மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் கூட்டம் யாழ். மாவட்ட அரசி யல்துறைப் பொறுப்பாளர் சி. இளம்பரிதி தலைமையில் தேசிய எழுச்சிப் பேரவையின் தலைமைச்செயலகத்தில் இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் அடுத்த மாதம் முதல் பாத்தீனியத்தை அனைத்து வளத் தையும் பயன்படுத்தி முற்றாக அழிப்பதாகவும், யாழ். குடாநாட்டில் உள்ள அனைத்துக் கிராமங்களிலும் இன்றைய அரசியல் நிலைமை சம்பந்தமான கருத்தரங்குகளை மேற்கொள்வதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (41)

# நாட்டின் ஒருமைப்பாட்டிற்கு பாதகமில்லாமல் பொதுக்கட்டமைப்பைச் செயற்படுத்தினால் தவறில்லை

### -மல்வத்த மகாநாயக்கர் கூறுகின்றார்

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்பின் மூலம் நாட்டின் ஒருமைப்பாட்டுக்குப் பாதகம் இல்லாமல் ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட பகுதிகள் அபிவிருத்தி செய்யப்படுமானால் அதனை நடை முறைப்படுத்துவதில் தவறில்லை என மல்வத்த மகாநாயக்கர் தெரிவித் துள்ளார்.

மல்வத்த மகாநாயக்கர் வணக்கத் துக்குறிரிய திப்பட்டுவாவே ஸ்ரீ சித் தார்த்த சுமங்கலதேரர் தெரிவித்த கருத்தில் வடக்குகிழக்கு தமிழ் முஸ் லிம் மற்றும் சிங்கள மக்களுக்கு இதன் மூலம் நன்மை கிடைக்குமா னால் யாரும் அதிருப்தி கொள்ளத் தேவையில்லை சனாதிபதியும் இந்தப் பொதுக்கட்டமைப்பினால் நாட்டுக்குப் பாதகம்இல்லை எனக் குறிப்பிட் டுள்ளார்

இந்த நிலையில் குறித்த பொதுக் கட்டமைப்புத் தொடர்பாக மக்களுக்கு தெளிவுப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என அவர் கேட் டுக்கொண்டார். இதேவேளை வடக் குக் கிழக்கு பிரதேசங்களில் அரசாங் கம் அபிவிருத்திப்பணிகளை முன் னெடுக்காவிட்டால் அந்தப் பிரதேசம் இயல்பாகவே தனிப் பிரதேசமாக அமைந்து விடலாம் என்றும் மகா நாயக்கர் தெரிவித்துள்ளார். (32)

# தொண்டர் ஆசிரியர்நியமனத்திற்கு அமைச்சரவை பத்திரம் தயாரிப்பு

வடகிழக்கில் கடமையாற்றும் தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனங்களை வழங்குவதற்கு வேண்டிய அமைச்சரவை பத்தி ரத்தைத் தயாரிக்குமாறு கல்வியமைச் சின் செயலாளருக்குப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

வடக்கு கிழக்கு மாகாணத்தின் கல்விப் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்வதற்கு நேற்றுக் கல்வி அமைச்சில் கூட்டம் ஒன்று நடை பெற்றது.அமைச்சர் பேரியல் அஸ்ரப் பின் தலைமையில் நடைபெற்ற இந் தக்கூட்டத்தில் கல்வி அதிகாரிகள் பங்கேற்றனர்.

இதன்போது ஆழிப்பேரலையி னால் பாதிக்கப்பட்ட 35இற்கும் மேற் பட்ட பாடசாலைகளைக் கட்டியெழுப் புவது தொடர்பில் காணிகளைக் கொள்வனவு செய்வது குறித்தும் ஆராயப்பட்டது.அத்துடன் தொண்டர் ஆசிரியர்களை நிரந்தரமாக்குவது, அம்பாறையில் 873 ஆங்கில ஆசிரி யர்களை நிரந்தரமாக்குவது, மற்றும் கல்முனை கல்வி வலயத்தின் அதி பர் பிரச்சினை என்பனவும் ஆராயப் பட்டன. (32)

## இலங்கைக்கான...

கப்படவில்லை என்றும் வெளியுற வுத்துறை அமைச் சுக் கூறுகிறது. இதுகுறித்து கொழும்பில் உள்ள ஐ.நா அலுவலகப் பேச்சாளர் ப்ரெனன் ஜோன்ஸ் கூறுகையில;

பல்வேறு சமூகத்தினரைச் சந்திக்க கிளிங்டன் விருப் பம் தெரிவித்திருந்தார். அதில் புனர்வாழ்வுக் கழகமும் இடம்பெற்றிருந்தது.

ஆழிப்பேரலைக் காலத்தில் புனர்வாழ்வுக்கழகம் ஆற் றிய பணியை அனைவரும் அறிவர். அத்துடன் ஐ.நா மற்றும் சிறிலங்கா அரசால் அங்கீகரிக்கப்பட்ட தன்னார்வ நிறுவனம்தான் புனர்வாழ்வுக்கழகம். அவர்கள் தம்முடன் தமிழ்நெற் புகைப்படக் கலைஞரைச் இச்சந்திப்பின்போது அழைத்து வந்தனரா? என்பது எமக்குத் தெரியாது என்றார்.

ஐ.நா பேச்சாளரின் இந்தக் கருத்துக்கு இராணுவத் தரப்பிலிருந்தும் அரச தரப்பிலிருந்தும் கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னர் இருமுறை ஐ.நா.வின் கொழும்பு பிரதிநிதி மைக்கேல் பெர்மியோவைச் சிறிலங்கா வெளியுறவுத்துறை எச்சரித்திருந்தது.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட தமிழீழப் பகுதிகளை ஐ.நா செயலர் நாயகம் கொபிஅனான் பார்வையிட விருப்பம் தெரிவித்தபோதும் கௌசல்யன் படுகொலைக்கு அனான் கண்டனம்தெரிவித்தபோதும் சிறிலங்கா வெளியு றவுத்துறை அமைச்சு இந்த எச்சரிக்கைகளை விடுத் திருந்தது.

தற்போது கிளிங்டன் பயணமும் சர்ச்சைக் குள்ளாகியிருப்பதால் அவரை சிறிலங்கா அரசு வெளியேற் றக்கூடும் என்று கூறப்படுகிறது. ஐ.நா.வின் சிறிலங்காப் பிரதிநிதிகளாக இருந்தவர்களை இருமுறை ஏற்கனவே சிறிலங்கா அரசு வெளியேற்றியிருக்கிறது என்பது குறிப்பிடத் தக்கது.

## வவுனியா...

வவுனியா வளாகம் அடிப்படை தேவைகள் பூர்த்தி செய்யப்படாமல் இயங்கி வருவதாகவும இவற்றினை நிவர்த்தி செய்யுமாறு தாம் கோரிக்கை விடுத்தபோதும் அவை இன்றுவரை செய்து தரப்படவில்லை என்றும் பம்பமடுப் பகுதியில் வவுனியா வளாகத்திற்கு ஒதுக்கப்பட்ட காணியில் கட்டடம் கட்டப்படாது தொடர்ந்தும் பூங்காவீதி யில் கட்டடங்களைக் கட்டி நிர்வாகம் தமக்கு சாதகமாக செயற்படுவதாக மாணவர்கள் குற்றம் சாட்டுகின்றனர். இது தொடர்பாக தாம் நிர்வாகத்துடன் கதைத்தும் எந்தவிதமான பயனும் கிடைக்காததை அடுத்துத் தாம் இந்தப் போராட்டத்தில் ஈடுப்பட்டுள்ளதாக மாணவர்களின் சங்கம் தெரிவிக்கின்றது. பம்பமடு பகுதியில் கட்டடம் கட்டுவதற்காக வந்துள்ள நிதியை பயன்படுத்தி பூங்கா வீதியில் கட்டடம் அமைப்பதாக மாணவர்கள் தெரிவித் தார்கள். இது தொடர்பாக வவுனியா வளாக முதல்வர் திருமதி எஸ். மகேஷ்வரனிடம் கேட்டதற்கு பம்பமடுப் பகுதியில் வாளாகம் கட்டுவதற்கு அடிகல் நாட்டப்பட்டு இருப்பதாகவும், இதற்கான வேலைத்திட்டங்கள் விரைவாக ஆரம்பிக்கப்படும் என்றும் தெரிவித்தார். (41)

## புத்தர்...

நகரசபைக்கு சட்ட ஆலோசனை வழங்குமாறு சட்டமா அதிபர் திணைக் களத்தைக் கேட்பதென்று அந்தச் சந்திப் பின்போது தீர்மானிக்கப்பட்டது. நகரிலிருக்கும் சட்டவிரோத கட்டடங் கள் அனைத்தையும் எதிர்வரும் இரண் டாம் திகதிக்கு முன்னர் அப்புறப்படுத்த நகரசபைக்கு ஆலோ சனை வழங்க வும் இந்தச் சந்திப்பில் முடிவு செய் யப்பட்டிருந்தது.

## பால்மா விலை குறைப்பு

நியூஸிலாந்து பால்மாக்களின் விலைகள் நேற்று முதல் குறைக்கப் பட்டுள்ளன.இதன்படி அங்கர் 400 கிராம் பொதியின் விலை ஐந்து ரூபா வாலும் ரத்தியின் விலை ஆறு ரூபா வாலும், ரெட்கௌவின்விலை ஒன்பது ரூபாவாலும் குறைக்கப்பட்டுள் ளன.அத்துடன் அன்மம் மற்றும் அன் லீன் பால்மாக்களின் விலைகளும் குறைக்கப்பட்டுள்ளன. (32)

## அரசகாணியில்...

அத்துடன் வழக்கின் பிரதிவாதியை எதிர்வரும் 14 நாட்களுக்குள் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யவேண்டுமெனக் கட்டளையிட்டார்.

இதேவேளை திருகோணமலை நீதவான் நீதிமன்றத்தில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுக்கு அமைய திருகோணமலை நகரப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள அனுமதிபெறாத நிர்மாணங்களை அகற்றும் பணிகள் நகர அபிவிருத்தி அதிகார சபையிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது. (32)

## சிறிலங்கா...

நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் இதற்கு எவ்.என்.ஸி.ரகத் துப்பாக்கி பயன்படுத் தப்பட்டிருக்கலாம் எனவும் ஆரம்ப விசாரணைகளில் இருந்து தெரியவருவதாகக் கூறப்படுகிறது.

துப்பாக்கிச் சூட்டுடிற்கு இலக்கான முத்தலிப் படுகாயமடைந்த நிலையில் தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட சிறிது நேரத்தில் மரணமடைந்ததாகச் சிறிலங்கா நடவடிக்கைத் தலைமை அலுவலகம் அறி வித்துள்ளது.

மேஜர் துவாம் நிஷாம் முத்தலிப் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் முதலாவது இராணுவ அணியின் கட் டளையிடும் அதிகாரியாக நியமிக்கப்பட்டார். 1992 ஆம் ஆண்டு தொடக்கம் 1994 ஆம் ஆண்டுவரையான காலப்பகுதியிலும், பின்னர் 2000 ஆம் ஆண்டு தொடக்கம் 2001 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் வவுனி யாவிலுள்ள இராணுவப் புலனாய்வுப் பிரிவின் தலைமை அதிகாரியாகவும் பணியாற்றியுள்ளார்.

முதலில் 1986 ஆம் ஆண்டு இராணுவத்தில் சேர்ந்த இவர் 1987 ஆம் ஆண்டு கெமுனு அணியில் இரண்டா வது லெப்டினனாக நியமனம் பெற்றார். 1990ஆம் ஆண்டு இராணுவ புல[illegible]வுப் பணியில் இணைந்து 1995 ஆம் ஆண்டு இ[illegible]வப் புலனாய்வுப் பிரிவின் கட்டளை யிடும் அதிகா[illegible] சேவையாற்றிய பின்னர் சுமார் மூன்றரை வருட[illegible]ழ்ப்பாண இராணுவப் புலனாய்வுப் பிரிவின் கட்டளை[illegible]தளபதியாகவும் பணியாற்றியுள் ளார்.

லெப். கேணல் முத்தலிப் அமெரிக்கா, இந்தியா, ஹவாய், பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் புலனாய்வுத் துறை மற்றும்பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கையில் விசேட பயிற்சி பெற்றவரெனவும் இராணுவத்தின் உயர்விருதான ரணவிக்கிரம பதக்கம் பெற்றவரெனவும் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் தயாரட்ணாயக்க கூறியுள்ளார்.

இதேவேளை சுட்டுக்கொல்லப்பட்ட மேஜர் முத்தலிப் பின் மனைவியும் ஓர் இராணுவ அதிகாரி என்பதும் குறிப் பிடத்தக்கது.

இவரது கொலை தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், பிரதி பொலிஸ்மா அதிபர் லயனல் குணத்திலகவின் வழிகாட்டலுக்கமைய குற்றப் புலனாய்வுத்திணைக்களம், கொழும்பு குற்ற விசார ணைப்பிரிவு, விசேடவிசாரணைப்பிரிவு ஆகியன விசாரணை களை மேற்கொண்டுள்ளதாகவும் பொலிஸ்மா அதிபர் சந்திர பெர்னாண்டோ கூறியுள்ளார்.

சிறிலங்காப் புலனாய்வு அதிகாரி ஜெயரட்ணம் கொழும்பில் கடத்தப்பட்டதைத் தொடர்ந்து பாதுகாப்புத் தேடி சிங்கப்பூருக்குச் சென்றிருந்த பல புலனாய்வு முக் கியஸ்தர்களில் மேஜர் முத்தலிப்பும் ஒருவராவார். சில நாட்களுக்கு முன்னரே அவர் கொழும்பு திரும்பினார் எனவும் கூறப்படுகின்றது.

லெப்.கேணல் நிசாம் முத்தலிப் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து கொழும்பிலும் சுற்றுப் புறங்களிலும் பாதுகாப்புப் பலப் படுத்தப்பட்டுள்ளது. (32)

# சாவு அறிவித்தல்



பிறப்பு-1939-05-01

இறப்பு-2005-05-30

**திரு.ஆண்டி சின்னத்தம்பி**

புங்குடுதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், புதுக்காடு இராம நாதபுரத்தில் வசித்து வந்தவரு மான திரு.ஆண்டி சின்னத்தம்பி அவர்கள் 30.05.2005 அன்று காலமாகிவிட்டார். இவர் பொன்னம்மாவின் அன்புக் க்ணவருமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 01.06.2005 இன்று பிற்பகல் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இராமநாதபுரம் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்என்பதனை அனைவருக்கும் தெரியப் படுத்துகின்றோம்.

தகவல்:- குடும்பத்தினர்.

(6226)

**[illegible]ற்றாடல் தினம்-ஜூன்-05**

நீரது இன்றேல் வாழ்வது இல்லை!

இயற்கை வளரது அழித்தால் தாழ்வது பெருகும்!

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு யூன் மாதம் 01 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது